REGD 4642 M.

# திராவிடநாடு

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணு

மலாய்நாடு 12 காசு

| | | |
|---|---|---|
| மலர் 8 | 23-4-50 | இதழ் 43 |


## வேதனைப் படுகிறுன் விவசாயி!




## 'விருத்தம்' பாடுகின்றனர் சர்க்கார்!

# வெந்த புண்ணிலே வேல்!

வழியோரம் உருண்டு கிடக்கும் வரதனை, வாய்ப்பேச்சு கண்டு மயங்கி, "வா, என் கண்ணாளா வந்தென்னை ஆதரிப்பாய் குணாளா" என்று வாழ்விழந்து, திசை தெரியாது, துணையற்றுத் திண்டாடும் மாடிவீட்டு மாதரசி...அழைத்து, அவனையே தன் 'துணை'யாக அமர்த்திக்கொண்டால், கொஞ்சநாள் சென்றதும் அக்கோமளவல்லியின் கதி, மந்திகையில் கிடைத்த மலர் மாலையாகிவிடும்! மண்டுகத்தின் கரங்களிலே தரப்பட்ட திருக்குறள் போல, குருடன் கையிலே தந்த கொவ்வை இதழ் ரோஜா போல ஆகிவிடும்!

"நம்பினேன்—நாய்போலத் திரிந்தாலும் நல்லவன் போலத் தெரிகிறானே, ஏதோ கஷ்டகாலம் போலும் ......நடுவீட்டில் வைத்து நல்லது செய்தால் 'நமக்கொரு துணையாவானே' என்றுதான் எண்ணினேன். என் எண்ணத்தில் இடிவிழுந்தது, இதயத்தை அவன் செய்கைகள் இடித்துப் பொடிப் பொடியாக்குகிறது,—நம்பிக்கை நாசமாயிற்று, வரதன் என் வாழ்வைச் சிதைக்கும் வாளாகிவிட்டான்" என்று தெருச்சுற்றியை 'நாயகனாக' வரித்த அந்நாரீமணி துக்கத்தால் துடிப்பாள், சோகத்தால் கண்ணீர் சிந்திக் கதறுவாள்!

நம்பியவன், நல்லவனாக இல்லாததோடு, நயவஞ்சகனாக ஆகி "எப்போது இருட்டும், இவள் ஏமாறுவாள், நம் திருட்டுத் தொழிலைத் துவங்க" என்று கள்ளச் சிந்தையினனாய், கையில் கிடைத்ததைக் கைப்பிடித்தவள் ஏமாந்தபோது, கடைசி வீட்டுக் கனகாங்கியின் காலடி சேர்ப்பிக்கும் கயவனாகிவிட்டால், மாதரசியின் மனநிலை—தீயிடைச் சிக்கிய மானாகிவிடும்! மனம் புழுங்கிச் சாவாள்!

மதிகேடனை மணாளனெனக் கொண்டு, பின் மண்டையிலடித்துக் கொண்டு அழும் மாதரசியைப் போலாய் விட்டது, இன்று, மக்கள் நிலை.

'நல் வாழ்வு தருவேன்' என்று நாளெல்லாம் வீதிகளிலே முழக்கமிட்டு, நல்லவராக உலவி வந்தவர்கள், இன்று நாடாள்வோரானதும், கூட்டை விட்டுப் புறப்பட்ட புறாபோல, கட்டவிழ்த்துவிட்ட காளையைப்போல,'மாதரசியின் மணாளனாகி விட்டேன் இனி எல்லாம் என்காலடியில்தானே' என்று எண்ணங்கொண்ட இதய சுத்தியற்றவன் போல ஆகிவிட்டனர்.

மாதரசி, சிதைந்து சித்திரவதைப் படும்போது,—கைப் பிடித்தவன், கரத்திலே கன்னக்கோலும் கருத்திலே கள்ளச் சிந்தையும் கொண்டு உலவுவது போல ஆகிவிட்ட மாகாண மந்திரிகளிலே, மலையாள மாதவமேனன் கதை குறிப்பிடத்தக்கது:

மலர் மாலையின் பெருமை மந்திக்குத் தெரியாது, மண்டுகம் எப்படி அறியும் திருக்குறள் பெருமை, குடிகேடன் அறிய முடியுமா கோமளவல்லியின் அழகை? அதைப்போல மாகாணக்கல்வி நிர்வாகம், காங்கிரஸ் ஆட்சியில் சிக்கக்கூடாத ஆட்களிடம் சிக்கிவிட்டது.

பெருமையறியாதவர்களின் பிடியிலே சிக்கிய கல்வி மந்திரி சபையின் போக்கைக் காணும்பொழுது —கண்ணீரல்ல, இரத்தக் கண்ணீர் எழும்பும்.

கல்வி—ஒரு நாட்டின் கருந்தனம், அறிவியலிலும் அரசியலிலும், வாழ்க்கைப் பாதையிலும் மனிதனின் வழிகாட்டி!

'கல்வியில்லாதவன் நன்மரம், கல்லாதவனின் கண்ணிரண்டும் கண்களல்ல; புண்கள்! கல்லாத நாளென்ன நாளே'—இது போன்ற கருத்துச் சிதறல்கள், கல்வியின் பெருமை குறித்து மக்கள் மன்றத்தில் அன்று தொட்டு இருந்துவரும் 'ஆசை'யை விளக்கும் மாணிக்க மொழிகள்.

சிறு கை நீட்டி, குறுநடை நடந்து மழலையால் மகிழ்வித்து, தத்தித் தவழும் செல்வச் சிறுவன், துள்ளித் திரியும் வயது பெற்று, பள்ளிக்குச் செல்லும் பருவமடைந்ததும், 'என் பரிமளச் செல்வன் படிக்கக் கிளம்பி விட்டான். பாருங்கள்! அவன் போகும் அழகை' என்று குதூகலத்துடன் கூறி மகிழ்வாள் தாய்—தனது தனயன் அறிவு வாயிலின் படிக்கட்டுகளை ஏறத் துவங்குகிறான் என்பதையெண்ணி இதயம் பூரிப்பார் தந்தை. கல்வி கற்கச் செல்லும் குழந்தைச் செல்வங்களைக் கண்டு குதூகலமும் பெருமிதமும் கொள்ளாத பெற்றோர் இருக்க முடியாது!

விரியாத இதயம், அறியாதவயது, வாழ்க்கையின் அரும்பு நிலையிலிருப்பவர்கள்—குழந்தைகள்.

இந்தக் குழந்தைச் செல்வங்களின் இன்பகாலம், கவலையில்லாத பருவம், காங்கிரஸ் ஆட்சியில் கருகிய மலராக்கப்பட்டு வருகிறது.

இந்த 'அரும்பணி'—முதலாவது கல்வியமைச்சராகயிருந்த அன்பர் அவினாசியார் காலத்தில் உதயமாகி, இப்போது 'மலையாளத்தார்' காலத்தில் மலர்ந்து வருகிறது.

'தொட்டால் சுருங்கும்—விட்டால் விரியும்' தொட்டாற் சுருங்கி கொடிகளைப் போன்றது, தொட்டில் பருவம் கடந்து, கல்விக் கோயிலை நோக்கும் இளங்குழந்தைகளின் இதயங்கள்! தாயின் ஆசையும், தந்தையின் அன்பும் தவிர வேறொன்றும் அறியாது, மண் வீடு கட்டி, மரப்பாச்சி வைத்து மகிழ்ந்துவிளையாடி, கவலையில்லாக் கன்றுகளாய் இருக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளங்களை—நிரப்ப நிரப்பக் கொள்ளும் கோணிப் பை யென்று யெண்ணிவிட்டனர், 'நீ முந்தி, நான் முந்தி'யென்று பதவிப் பீடம் ஏறிய 'பரம' தியாகிகள்!—'தியாகம்' என்ற தகுதியை வைத்துச், சதுரங்கஆட்ட

(அடுத்த பக்கத்தில்)

# வாழ்க, கவிஞர்!



எண்ணங்கள் பழுத்த இதயச் சோலை, தூக்கிடும் விழிகளில் துணிவு தெறித்திடும் வீர உருவம், தென்றல் வீசிடும் அன்பு தமிழ்ப் பேச்சு, விழித்திட்ட திராவிடத்தின் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 59-வது வயதைத் தாண்டி அறுபதுக்குள் எடுத்தடி வைத்து விட்டார், என்று செய்தியறிந்து மகிழ்கிறோம்! இருட்டிலே கிடந்த இலக்கிய உலகை ஒளிமயமாக்கிய புதுமைக் கவிஞர் நமது பாரதிதாசன்! கல்லுக்கும் கட்டைக்கும் பாட்டமைத்து பொல்லாத நிலை வளர்த்தோருக்கு அவர் ஒரு "பாண்டியன் வாள்" 'இருண்ட வீட்டில் ஏங்கிக்கிடந்தோருக்கு அவர் ஒரு இலட்சிய விளக்கு! 'இல்லை, இல்லை'யென ஏங்கி நின்ற பகுத்தறிவுப் பாசறைக்கு அவர் ஒரு நடமாடும் 'தமிழ் உருவம்!'

அவர்தந்த கருத்துக்கள் திராவிடத்தின் நல்வாழ்வுக்கோர் முரசொலி! அவரது எண்ணங்கள் இந்நாட்டு இளம் இதயங்களின் வீர முழக்கம்! திராவிடத்தின் தனிப்பெரும் கவிஞர் அவர்—இலக்கிய உலகின் இன்றைய கலங்கரை விளக்கம் நம் பாரதிதாசன்!

வாழ்க அவர்! வளர்க அவர் சேவை!!

—✲—

(முன் பக்கத் தொடர்ச்சி)

மென அரசியலை நினைத்து ஆட்சிப் பீடமேறிவிட்ட அமைச்சர் 'கனம்'கள்!

கல்வி மந்திரியாக பதவியேற்று, ஈராண்டுக்குள் 'இழுந்து' விட்டு, இப்போது மாவட்டத்துக்குள் சுற்றியலைந்து கொண்டிருக்கும் ராமகிருஷ்ண சிஷ்யர்—அன்பர் அவிநாசி—குழந்தையின் மழலை, கொஞ்சிடும் பேச்சு, கொத்திவிழுக்கும் சிரிப்பு அறியாத பிரம்மச்சாரி! 'பிரம்மச்சாரி' அமைச்சரானார், எதிர்கால வாழ்க்கைத் தோட்டத்தின் இன்றைய செடிகளை வளர்க்கும் கல்வித்துறைக்கு!

'மந்திரத்தால் வந்துவிட்டது மாங்காய்' என்று வீதியிலே கைதட்டி, கூச்சல் போட்டு, கூட்டங்கூட்டி வித்தை செய்வது போன்றது. வித்தியாகூடம்என்று எண்ணிக் கொண்டு தனது 'இலட்சியக் கனவுகளை' நனவாக்கும் விளையாட்டுக் கூடமென நினைத்துப், புதுப் புது மாறுதல்களைச் செய்தார்—சலனமற்ற, குளத்தில் கற்களை வீசி, அலைக்கழித்தார்!

அவரால்எழுப்பப்பட்ட அலையின் ஓசை அடங்கவில்லை. அவருக்குப் பின் கல்வித்துறையின் காவலராக ஆகிவிட்ட' மலையாளத்தார், புது அலைகளை உண்டாக்கும் புனிதக் கைங்கர்யத்தில் இறங்கியிருக்கிறார்.

கல்வியமைச்சர் என்றாலே தங்களை ஒரு 'மகாபண்டிதர்' என்று மக்கள் எண்ணவேண்டும் என்ற எண்ணம் பிறந்துவிடும் போலிருக்கிறது இந்த 'மதியூக' மந்திரிகளுக்கு!

வளைந்து நெளியும் வான்கோழியை, 'கானமயில் இதைப் பாரடா' என்று எவனோ கேலிக்குச் சொல்ல, உண்மையாகவே மயிலாகி விட்டோம் போலும் என்று நினைத்துக்கொண்டு, தன் பொல்லாச் சிறகை விரித்துக்கொண்டு குதிக்க ஆரம்பித்ததாமே அக் கதை போல, இப்புருஷ ரத்தினங்கள் 'கல்வி மந்திரி' என்று கூறக் கேட்டதும், அதற்குள்ள தகுதி 'அதிமேதை'யாக நடந்து கொள்வதுதான் என்று கருதியிருக்கின்றனர் போலும்!

அவிநாசி அவர்கள் கையில் 'கல்வி இலாகா' சிக்கிய போதும், கண்டபடி பேசுவது, காட்டுப் போக்காய் நடப்பது, திடீரெனச் சீறுவது, உடனடியாக ஓய்ந்து 'இதோபதேசம்' செய்வது—இப்படித்தான் ஆடினார், அமைச்சர் பதவி கையை விட்டுப் போகும் வரையில்!

அந்தப் புத்தி, அவரது சகாவான மலையாள மாதவமேனனுக்கும் அப்படியே இருக்கிறது; இன்னும் அதிகமான அளவில்—இது மாதவமேனன் 'மதியூகி'யாக நடிக்க விரும்பி 'பொழியும்' கருத்துக்களிலிருந்து நன்றாக வெளிப்படுகிறது.

கம்பர் விழாவிலிருந்து, கடைத்தெரு சுற்றும் வேலைவரை—எதையும் விடாது சுற்றி வருகின்றார், மாதவமேனன். நாட்டு வளப்பமறியா கிணற்றுத் தவளைகளாயிருத்தல் கூடாது என்ற நல்லெண்ணம் இருந்தாலும் இருக்கலாம். இதற்கு—நாம் மறுக்கவில்லை!

பதவி—ஒரு சறுக்குவழி! இருக்கும் வரையில் எல்லாவற்றையும் அனுபவித்து விடுவோமே—என்ற ஆசையும் இருக்கலாம். நமக்கு அசூயையில்லை, பாவம், அனுபவித்து விட்டுப் போகட்டும்!

'கோட்டை'க்குள் குந்தி, குமுறி வரும் குறைகளைத் தாங்காது கொஞ்சம் சுற்றிவிட்டுத்தான் வருவோமே என்று, நாடு சுற்றக் கிளம்பியிருக்கலாம்—போகட்டும், 'பொதுப்பணத்தின்' ஒரு பகுதி கஷ்டப்பட்டு சுயராஜ்யம் பெற்றதற்குக் 'கைக்கூலி' போலும்—என்று கூட விட்டு விடலாம், பெருந்தன்மையுடன்!

ஆனால், ஊர் சுற்றும் 'உத்தம திருச் சேவை'யில் தன்னை அர்ப்பணித்துவிட்ட அமைச்சர் 'பெருமகனார், ஆங்காங்கு சிந்திக்காது சிதறும் வார்த்தைகளைக் காணும் பொழுது, நமக்குசிற்றம் வரவில்லை-சிரிப்பு வருகிறது.

அண்மையில் அண்ணாமலைப்பல்

> எந்தஜாதி தன்னுடைய அடிமைத் தனத்தை எல்லாம் தனது நன்மைக்கே என்று சகித்துக் கிடக்கிறதோ அதுவரை அந்த ஜாதிக்கு விமோசனமே ஏற்படாது.
>
> மில்லர்

கலைக் கழக சமஸ்கிருதப் பேரவையின் ஆண்டுவிழாவில் பேசியபோது

> "வடமொழி, தென்மொழியென்று இங்குள்ள சிலர் பேசுகிறார்கள். இது தவறு. எல்லாம் நமது மொழிகள்தான்"

என்று வெளியிட்டிருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தீப்பொறிகளின் உறைவிடம். வன்மை கொண்டோர் வாழுமிடம். மொழியியல்பாகுபாடுணர்ந்த சிதம்பரனார், தமிழைக் குடித்த ஔவை, தருக்கு அடக்கும் வெள்ளைவாரணனார், சதாசிவத்தார் போன்ற 'தமிழ்ச் சோலை'கள் உலவும் பூங்கா, அது! அங்கு போய் 'நெருப்பை நீரென்று நினை! நரியும் பசுவும் ஒன்றுதான்!' என்று பரமோபதேசம் செய்திருக்கிறார் — துணிவு தமக்கும் உண்டு என்பதைக் காட்டும் ஆசையின் விளைவோ, என்னவோ நமக்குத் தெரியவில்லை!

தமிழையும் வடமொழியையும் ஒன்றாக்கி ஒற்றுமைப்படுத்தி வைக்கும் உத்தமப் பணியிலிறங்கி இருக்கும் 'மலையாளத்தாரின்' தேங்கிய ஞானம் — இந்த நாட்டின் பிரச்னைகளைமட்டுமல்ல, இன்றுள்ள பல பிரச்னைகளைத் தீர்க்கும் வழியையும் கூறியிருக்கிறது. அவர், கூறுகிறார்.

> "கம்பர், வால்மீகியைக் கற்பதால் இன்றைய பிரச்னைகளில் பலவற்றைத் தீர்க்க இயலும்"

சிந்தியுள்ள சிந்தனை 'முத்தைக்' கண்டதும், சிரிப்பு வரும் தோழர்களில் பலருக்கு — நாடக மேடையிலே, "சாகசச்சொல் ஒன்று போதுமடி சதாரம், சமுத்திரமெல்லாம் வந்துவிடும் சதாரம்!" என்று அர்த்தமில்லாமல் அளப்பானே கள்ளபார்ட் போட்டவன், அந்தரகத்தில் "அமைச்சரின்" கற்பனை ரதம் ஓடுகிறது!

தமிழ் தெரியாது — கம்பராமாயணப்பெருமைபற்றி பிரசங்கம்!

தமிழ்ப் பெயர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களே பலர்—அது ஏன்?—புரியாது என்றாலும், கண்டனம்!

வடமொழியின் வகை என்ன — அறியமாட்டார், ஆனால் சேர்த்து வைக்க ஆசை!

தண்ணீர் எடுத்து வரும்போது, குடம் நிறைய நீரிருந்தால் அது குலுங்காது என்பார்கள்; குடம் நிறைய இல்லாமல் கால்பகுதியோ அரைவாசியோ நிறைந்துகிடந்தால் அத்தண்ணீர் தத்தளித்து சப்தம் எழுப்பும் என்பதைக் குறிக்கும், "நிறைகுடம் தளும்பாது" என்ற பழமொழி யொன்றுண்டு! அது நினைவுக்கு வருகிறது அமைச்சர் 'கம்பர்—வால்மீகியைக் கற்பதால் பல பிரச்னைகள் தீரும்' என்று சொல்வதைக் கேட்டதும்!

X X X

விஷமுணராது, வீம்பை மனதில் வைத்து வீணு கோரத்தையும் மூளையையும் செலவழிக்கும் 'முற்றுமுணரா' மலையாளத்தார் — அண்மையில் ஒரு யோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரியவருகிறது—

அன்பர் அவிளுசியார் புதுப் புதுபாடத்திட்டங்கள், அடிப்படைக் கல்வித்திட்டம், அது இது என்று தன் ஆசைபோன போக்கில், நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு "இந்தி மொழியை இளம் இதயங்களில் திணிக்கும் கைங்கரியத்தைச் செய்துவிட்டு, அதிருப்தியைப் பரிசாகப் பெற்றுக் கொண்டுபோய் விட்டார், இருக்குமிடம் தெரியாமல்!

அவர்விதைத்த விதையின் விஷக்காற்று பள்ளிக் குழந்தைகளைப் படாதபாடுபடுத்துகிறது — காலை முதல் மாலைவரை 'ஹ' வென்று சொல்லவும் 'க' வென்று கூறவும், 'அதை சிறிது அழுத்திசசொல்' என்று ஆசிரியர் அதட்ட, என்னவென்று தெரியாது விழித்து, விழியில் நீர்தேங்க வீட்டிற்கு வந்து, 'இந்தி புரியவில்லை அம்மா! படிக்கவே வரவில்லை'— என்று பரதவிக்கும் காட்சிகள் நடைபெற்றுவருகின்றன! முதல்பாரம் முதல், மூன்றாவது பாரம்வரை படிக்கும் மாணவக்குழந்தைகள் மந்திரிகளின் உண்மையுணரா வெறியாட்டத்தால் வேதனையில் சிக்கிச் சிதைக்கப்படுகின்றனர்—

"இந்தியில் 'பாஸ்' மார்க்கு வாங்க வேண்டும்; இல்லாவிடில் பாஸ் போடாதே." — என்றுகூட பள்ளிகளுக்கு இரகசியத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு காற்றுச் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

இது உண்மையென்றால், கொடுமை கொடுமை!! என்றே கூறுவோம் — குழந்தைகளின் எதிர் காலத்தைக் குட்டிச்சுவராக்கும் இதயமொன்றில்லா வெறிச்செயல் என்றே சொல்வோம்!

வேதனையில் வாடிவதங்கும் மாணவர்கள் வாழ்வில், இன்னொரு "கல்லைத்" தூக்கிப்போட மாதவமேனன் யோசனைசெய்துகொண்டுள்ளாராம்.

அது, கல்வி ஆலோசனைக் குழுவினர் தந்த கருத்துரையின் விளைவாம். இக்குழு, எது, யாரார் அடங்கியது என்ற விளக்கம் தேவையில்லாதது!

கல்வியமைச்சருக்குக் கட்டுப்பட்ட கல்வித்துறை குறித்து ஆலோசனை கூறிய 'பிம்பங்கள்' அவருக்குக் கட்டுப்பட்டதாகவோ அல்லது அவரைத் திருப்திசெய்விக்கும் ஆசைகொண்டதாகவோ தானேயிருக்கும்!

இந்த ஆலோசனைக் குழுவின் யோசனையை மேற்கொண்டு சர்க்கார் அமுல் நடத்தவிருக்கும் ஏற்பாடு -

> "முதல் பாரம் துவங்கி ஆறாம் பாரம் வரையில் கட்டாய பாடமாக இந்தி மொழியை வைப்பது"

என்பதுதான். கேளுங்கள்! "தமிழ் என் தாய், தமிழ் என் உயிர், தமிழ் என் வாழ்வு என்று தோள் தட்டி மார் தட்டி வெற்றிக்குரல் எழுப்பி வீரர்களைப்பலியிட்டு—வெங்குருதிச் சாக்காட்டில் விளையாடும் தோளொங்கள் வெற்றித்தோள்கள்" என்று வீரப் பண் பாடிய வீரர்களே கேளுங்கள்! இந்தியைக் கட்டாய பாடமாக்கப் போகிறார்களாம் — முதல் பாரம் முதல், ஆறாவது பாரம் வரை!

நொந்து பின் உடல் தேறிவரும் நிலைகொண்டவனைப்போல இருக்கும் சமுகத்தவரே, காணுங்கள், கல்வி யமைச்சரின் யோசனையை!

'எதிர்பாராது நம்மிடை' ஏற்பட்ட 'இடி'யை யெண்ணி, நாம் இடுப்பிழந்தோர்— என்றெண்ணிவிட்டார்கள் போலும்! இந்தி கட்டாயமாம்—இந்நாட்டில்!

"போகட்டும். தத்தித் தவழும் நமது நிலை துள்ளிக்குதிக்கும் நிலைக்கு வரட்டும்" என்று நம்மை நாம் பலப்படுத்திக்கொண்டு வரும் இந்த

(13-ம் பக்கம் பார்க்க)

# தூங்குகிறார், தூங்குகிறார்.........!

"தூக்கம் வரவில்லை! இரண்டு நாட்கள் துடித்துப் புரண்டேன்—தொல்லை விளைவிக்கும் துராத்மாக்களின் துடுக்கையடக்கவேண்டுமே, என்ன செய்வது, என்ற எண்ணம் என்னைப் படுத்தாத பாடு படுத்தியது!" என்று சோக கீதம் பாடினார், இந்திய சட்டசபையில், சர்தார் பட்டேல்!

பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து, சட்டசபையில் புதிய மசோதா ஒன்றைத் தயார் செய்து, சபையில் சமர்ப்பித்தபோது அவர் குறிப்பிட்ட வார்த்தைகள்—அவர் இதய வேதனையை எதிரொலித்தன!

"கம்யூனிஸ்டுகள் கலவரம் தாங்க முடியவில்லை — இப்போதிருக்கும் பாதுகாப்புச் சட்டத்தில் இடுக்கு விழுந்து விட்டதாக கல்கத்தா ஹைகோர்ட்டு தீர்ப்பு வழங்கிவிட்டது...இடுக்கண் விளைவிக்கும் வெறியர்கள் ஆட்டம், நாட்டைப் பாழ் செய்து விடுமே என்ற பயம் என்னை அலைக்கழிக்கிறது......ஆகவேதான் சந்துபொந்து இல்லாதபடி சட்டத்தைத் திருத்திப் புது மசோதா கொண்டுவந்துள்ளேன்" என்று பொருள்பட விளக்கினார், வேதனைகளை விவரித்து அவைகளைப் போக்க 'அவசர அவசரமாக'ச் சட்டம் கொணர்ந்துள்ளேன் என்று வெளியிட்டார்!

"வயது முதிர்ந்தவராயிற்றே, வயோதிகப் பருவத்தில் வருத்தத்தின்மேல் வருத்தம்—தொல்லைமேல் தொல்லைகள்! பாவம், அவர்தான் என்ன செய்வார்? கம்யூனிஸ்டுகளின் அக்கிரமம் அத்துமீறிப் போய்விட்டது — ஆகவேதான் இத்தனை அவசரமாக சட்டத்தைக் கொணரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது" என்று நினைத்தனர், நாட்டிலுள்ள பலர்!

"அக்கிரமத்துக்குப் பாலூட்டக்கூடாது, அட்டகாசங்கள் நாட்டிற்கு நாசம் விளைவிக்கும், நல்லவர்போல பேசி நாட்டைக் காடாக்கும் கயவர்கள் கொட்டம் அடக்கப்படவேண்டும்—சர்தாரின் சமத்து யாருக்கு வரும்? சண்டித்தனம் செய்யும் சழக்கர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்கப்போகிறார்" — என்று பத்திரிகைகள்கூட பாராட்டின, தலையங்கங்கள் தீட்டின.

நாட்டு வாழ்வில், புயலை எழுப்பும் புல்லுருவிகள் யாராயினும் அவர்கள் பொதுஜன விரோதிகள்தான்.

பொதுஜன விரோதிகளின் துடுக்கடக்கி, "துள்ளாதே! நாட்டுமக்களைச் சூறையாடாதே— கொலை, குத்து, வெட்டு நடத்தி நாட்டை இரணகளமாக்காதே! மக்களை பயம் பீதி சூழும் நிலைக்கு ஆளாக்காதே!" என்று தடுத்து, வேலி போட்டு, நல்வழி செய்வதுதான் நாடாள்வோருக்குரிய கடமையாகும்.

கம்யூனிஸ்டுகள்—பொதுஜன விரோதிகள்! எனவே, அவர்களையடக்க இரவெல்லாம் கண்விழித்துக் கொண்டுவந்தேன், இச்சட்டத்தை என்று கூறினார், சர்தார் பட்டேல்.

கம்யூனிஸ்டுகள்—இந்தியா முழுமையிலும் எடுத்துப்பார்த்தால் ஒரு சில ஆயிரம் பேர்கள் கூடத் தேற மாட்டார்கள். எனினும் அவர்களின் தொல்லையொடுக்க இந்த பாதுகாப்புச் சட்டம் அவசியம் என்றுகூறி— கம்யூனிஸ்டுகளை மட்டுமல்ல நாட்டையே பாதிக்கும்—சட்டம் செய்தார்.

காரணம், பொதுஜன விரோதிகள் இவர்கள்! பொதுமக்கள் வாழ்வில் வேதனையைச் சிருஷ்டிக்கும் வம்பர்கள் இவர்கள்!—எனவே இச்சட்டம் இன்றியமையாததாக இருக்கிறது என்று கூறப்பட்டது; பதில் தரப்பட்டது. பொதுமக்களை—பீதி பயம் வறுமை, வாழமுடியாத நிலை இவைகளுக்குப் பலியிடும் எவரும் பொதுஜனவிரோதிகள்தான். பொதுஜனத்தின் நித்திய வாழ்க்கையை இரணகளமாக்கி இரத்தத்தைச் சிந்தச்செய்யும் பலாத்கார நாச வேலைகளில் ஈடுபடும் எவரையும் அல்லது எக்கட்சியையும் பொதுஜன சேவை செய்வோர் என்று கூறமாட்டார்கள், மக்கள்!

ஆனால், பொதுஜனவிரோதி என்ற சொல்வீச்சு எதிர்க்கட்சிகள் மீதும், மாற்றுக் கட்சித் தொண்டர்கள் மீதும் பாய்ச்சத் தயங்காத ஆளவந்தாரின் பார்வையில், உண்மையான 'பொதுஜன விரோதிகள்' தென்படவில்லை.

X X X

"அலைந்தலைந்து வலைபோட்டோம்
அகப்பட்டது 101!
அதனாலே இலாபமில்லே—
ஆகாது எமக்கிந்தத் தொல்லே!"

புலி பிடிக்கப்போய் எலிபிடித்துவந்த வீரச்செயல்போல், புது டெல்லியிலிருந்து புதுத்தெம்மாங்கு ஒன்று புறப்பட்டிருக்கிறது!

புதுடெல்லியிலிருந்து தெம்மாங்கா? — அதுவும் தேன்மொழி தமிழிலா? என்று நண்பர்களிலே சிலருக்கு ஆச்சர்யமும், ஐயமும் எழும்பும்! ஆமாம், 'தெம்மாங்கு' தான்—ஆனால் நாம் மேலே தந்திருப்பதுபோல அல்ல; அதே கருத்தைத் தரும் தகவலாக!

வெட்கத்தோடு சிறிது துக்கமும் கலக்க வெளியிட்டிருக்கிறார்கள், "இதுவரை 101 தான் அகப்பட்டது'- என்று, சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட வருமானவரிப் பரிசீலனைக் குழுவார்.

கொள்ளை இலாபம் அடித்து, கோடி கோடியாய்ப் பணம் சம்பாதித்து, பெட்டிக்குள் இருக்கும் பணம் பற்றிய உண்மையை வெளியே சொன்னால் சர்க்காருக்கு வருமான வரி கட்டவேண்டுமே என்ற பயத்

தால், பொய்கணக்குமூலம் வாழ நினைக்கும் 'குபேரர்கள்' குறித்துப் பரிசீலனை செய்யுமாறு நியமனம் செய்யப்பட்டதுதான் வருமான வரி பரிசீலனைக் கமிஷன்.

உட்கார்ந்தபடியே இலட்ச இலட்சமாகச் சம்பாதித்துவிடுகிறார்கள். இருந்த இடத்தைவிட்டு எழும்புவதுகூட இல்லை — 'டெலிபோன்' ஒலிக்கும், 'தந்தி' ஒன்று பறக்கும், சிறிது நேரத்துக்கெல்லாம் 'சரக்கு விற்றுப்விட்டது. இலாபம் இத்தனை ஆயிரம்,என்று சொல்வார்கள்.

சரக்கைக் கண்ணால் பார்ப்பதுகூட இல்லை — சம்பாதித்துவிடுவார்கள் இலட்சக் கணக்கில்.

கைக்கு வேலையிருக்காது, உடம்பு சிறிதுகூட வளையவேண்டிய அவசியமில்லை, அரைநிமிஷப்பேச்சு—அதுவும் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராது! — வியாபாரம் முடிந்துவிடும்; 'இலாபம்' இலட்சக்கணக்கில் வந்துவிடும்.

வியர்வை சிந்தவேண்டிய வேலையில்லை, வேதனைப்படவேண்டிய அவசியமில்லை, யாராரோ உழைத்துக் கொட்டுவார்கள் ஆலையில்,உழைத்து உற்பத்தி செய்த பொருள்களை உட்கார்ந்தபடியே 'பேரம்' பேசி வியாபாரம் செய்து — பெட்டிக்குள் பணத்தைக் கொட்டுவார்கள், முதலாளிகள்.

உடலுழைப்புச் சிறிதுமின்றித் தாங்களே நேராகப் பாடுபட்டுச் சம்பாதிக்காத பணத்தில், சர்க்காருக்கும் பங்கு கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் — வருமானவரி வசூலிப்பதன் அடிப்படைச்சித்தாந்தம்.

உழைக்காது விளைத்த இலாபத்தில் ஒருபங்கு சர்க்காரைச் சாரும் என்பதே வருமானவரி வசூலிப்பதன் தத்துவம்.

உழைக்காது விளைக்கும் உத்தமர்களோ, உடல் அலுங்காதுகொட்டிக் குவித்த இலாபக் கொள்ளையில் சிறிது அளவுகூட இழக்கவிரும்புவதில்லை. இலாபம் கொள்ளையாகப் பெட்டிக்குள் கிடந்தாலும், அதை மறைத்து சர்க்கார் கண்ணில் மண் தூவும் "மகத்தான" வேலைகளில் ஈடுபடுவதே தங்கள் வாழ்வின் பணி என்று எண்ணிக் கிடக்கிறார்கள் — முதலாளிமார்கள்.

வருமான வரியிலிருந்து தப்புவது எப்படி என்று வழிவகைகள் காண்பது—இன்று முதலாளிமார்களின் முக்கிய அலுவல்களில் ஒன்றாகி விட்டது.

போர்க்காலத்தில் கள்ளமார்க்கெட்மூலம் கொள்ளை இலாபம் சம்பாதித்தார்கள், கோடி கோடியாகக் கொட்டிக்கொண்டார்கள், பெட்டிக்குள். அபரிமிதமாகவந்த அவ்வளவு தொகைக்கும் வருமானவரிசெலுத்த வேண்டி வந்தால், வந்தது கரையுமே என்ற வருத்தத்தால் அவ்வளவு தொகையையும்மறைத்து விட்டனர் — கணக்குக்கு அகப்படாமல், ஒளித்துவிட்டனர். இப்படி யார் கண்ணிலும் படாமல் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய்க்கு மேல் நாட்டின் பணம் மறைந்து கிடக்கிறது. மறைத்திருப்பவர்கள் மண்வெட்டி தூக்கும் மன்னார்சாமிகளல்ல; கார் பெருகுகுறையாது 'கனவான்களாக' உலவும் கண்ணியர்கள் — முதலாளிமார்கள்.

இப்படி வரிக்குத் தப்பி,கண்ணுக்குத் தெரியாது கிடக்கும் தொகைகளைக் கண்டுபிடித்து, அவைகளுக்கு வரிபோடும் வேலையைச் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டதுதான் வருமான வரி கமிஷன்.

வேண்டிய அதிகாரங்களோடு, இந்தக் கமிஷன் சர்க்காரால் நியமனம்செய்யப்பட்டது 1949 டிசம்பர் கடைசிவரை தாங்கள் சாதித்தவேலைகள் குறித்து அண்மையில அக்கமிஷன் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில்தான் 'அலைந்தலைந்து வலை போட்டோம், அகப்பட்டது 101' என்ற சோக கீதம் வெளியாகியிருக்கிறது.

> வருமான வரிக்குத் தப்பி மறைந்துகிடக்கும் 1365 வழக்குகள் எங்கள் பரிசீலனைக்கு விடப்பட்டன.
>
> இவ்வளவு வழக்குகளிலும் பரிசீலனைக்குப் பின் எங்களால் கண்டுபிடிக்கப்பட்டவழக்குகள் தொகை 101தான். இத்தனை வழக்குகளிலிருந்தும் மறைந்துவிட்டதாக நாங்கள் கண்டுபிடித்த தொகை மூன்று கோடிகள்தான்.
>
> இன்னும் நாங்கள் பரிசீலனை செய்யவேண்டிய பெரிய பெரிய 'கேஸ்கள்' இருக்கின்றன.

கமிஷனின் அறிக்கையில் காணக்கிடக்கும் கருத்துக்கள் இவை.

மறைந்து விட்டது—பணம் பற்றிய தகவல்கள் வெளிப்படவில்லையென்று வெளியிட்டிருக்கின்றனர், கமிஷனைச் சார்ந்தோர்.

சம்பாதித்த பணத்தை மறைத்து, சர்க்கார் கண்ணில் காட்டாமல் செய்ய முதலாளிகள் செய்யும் 'மோசமோன' வேலைகள்—அனந்தம்.

கணக்கு நோட்டில் வரவு அதிகமிருக்காது—நஷ்டம் தென்படும். ஆனால் பெட்டியிலோ பணம் பத்திரமாக இருக்கும்!

ஒரே நபர்—பல பெயர்களில் உலவுவார்! கம்பெனியின் பங்குகள் பல பெயர்களில் வாங்கப்பட்டிருக்கும்! வியாபாரம் நடைபெற்ற விபரங்கள் வெளிவராது—சாமர்த்தியமாக மறைக்கப்பட்டிருக்கும்.

முதலாளிமார்கள் கைக்கு வந்த இலாபத்தைக் கண்ணுக்குக் காட்டாது மறைக்க கையாளும் முறைகள் — ஏராளம். எதற்கும் தப்பி மறையும் 'மாயாவாதம்' நிறைந்தது!

பொய்க் கணக்கு
ஏமாற்று வித்தை
கள்ளச் சிந்தை
கொள்ளைப் புத்தி

முதலாளித்துவம் கையாளும் முறைகளில் சில, இவை! சாகச வேலைகள், சாமர்த்தியத் தந்திரங்கள் மூலம் சர்க்கார் கண்ணில மண் தூவும் இந்த 'மாவீரர்கள்' பற்றிய விசாரணையிலிறங்கிய வருமான வரி பரிசிலனைக் கமிஷன் 'முகாரி'யுடன் அறிக்கை தந்திருக்கிறது.

X X X

"எனக்குக் கட்டுப்பட்டவள்தான் என் மனைவி! எத்தனை நாட்களாக அவளைத் தேடுகிறேன் தெரியுமா? இன்னும் அகப்படவில்லை, எப்படியோ எங்கோ போயிருக்கிறாள்" என்று, தன் மனைவி 'பத்தினி ரத்தினத்தை'ப் பற்றி ஒரு கணவன் பேசவேண்டியேற்பட்டால் எவ்வளவு வெட்கமும் வேதனையும் தாண்டவமாடவேண்டுமோ, அவ்வளவு சோகமும் சோர்வும் தென்பட்டிருக்க வேண்டும் அவருக்கு! எனினும்

சிறிதுகூட வேதனையின்றி 'தங்கள் கைக்குச் சிக்கவில்லை' யென்ற தகவலைத்தரும் கமிஷனின் அறிக்கையை சட்டசபையிலே சமர்ப்பித்தார்—நிதிமந்திரி ஜான் மத்தாய்.

வருமான வரி பரிசீலனைக் கமிஷன் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டது. கமிஷன் எவ்வளவு முயன்றும் முதலாளிகளின் தந்திர சாகசங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம், சர்க்கார், முதலாளித்துவ 'முதலை'கள் தவறு செய்தாலும், தப்பிச் செல்லும் பாதை காண வழி வகுத்துத் தரும் நிலையிலிருக்கிறது. மறைந்து விட்ட பணத்தின் கணக்கு விபரம் கண்டுபிடிக்க முடியவில்லையென்று கமிஷன் வேதனையோடு வெளியிட்ட தகவலைக் கண்டு வெட்கப்பட்டிருக்கவேண்டிய நிதி மந்திரியார், 'நீட்டோலை' படித்திருக்கிறார் சட்டசபையில்!

மந்திரியார் தகவல், சபையிலே 'சூறாவளி'யை எழுப்பியிருக்கவேண்டும். எப்படி, ஏன், இந்த நிலையில் முதலாளிகள் போக்கு இருக்கிறது? இதைத்தடுக்கும் வழிவகைகள் கண்டதா, சர்க்கார்? என்ற கண்டனமாரிகள் எழும்பியிருக்க வேண்டும். ஆனால், ஒரு வார்த்தைகூட வரவில்லை. மக்களின் பிரதிநிதிகளாய்ச் சென்றிருப்போரின் வாயிலிருந்து!

மக்களின் பிரதிநிதிகள் 'முதலாளிகளின் விவகாரம்' வந்தபோது மஹோன்மத்தர்களாகிவிட்டனர்.

மக்களுக்குப் பணிசெய்வதே எங்கள் மகத்தான பொறுப்பு என்று எழுத்தோவியங்களைத் தீட்டும் "பத்திரிகைகள்"கூட 'கமிஷனின் கண்ணீரை' மக்களுக்குக் காட்டவில்லை, மறைத்துவிட்டன!

> எங்களால் முடியவில்லை. மூன்று கோடிக்குத் தான் விபரம் கிடைத்தது.
>
> 101 வழக்குகள்தான் முடிவு கட்ட முடிந்தது.

என்று கமிஷன் வெளியிட்டுவிட்டது. கமிஷனைக் காயவோ, கண்டிக்கவே முடியாது. கமிஷன் சர்க்கார் சிருஷ்டித்த அம்பு! அம்புக்கு அகப்படாமல் தப்ப முதலாளிகள் தற்காப்போடு இருக்கும்போது, எய்த அம்பால் என்ன செய்துவிட முடியும்?

* * *

பட்டேலின் பசப்புவார்த்தைகள், நேருவின் அன்புச்சொற்கள் எவையும் முதலாளிகளிடம் பலிக்கவில்லை. பலமுறை வேண்டுகோள் விடுத்தும் பயனற்றுப்போய்விட்டது!

பசப்பும் மோகினிகளாக இருக்கும் முதலாளித்துவம், சர்க்காரின் செல்லப்பிள்ளைபோல சிரித்து விளையாடிக்கிடக்கிறது நாட்டில்.

சர்க்காருக்குச் சேர வேண்டிய வரியை மறைக்க, சாகசத் தந்திரங்களைச் செய்துத் தப்பித்துக்கொள்கிறது. நாட்டை வளமாக்கும் பணத்தைப் பதுக்கி வைத்துக்கொண்டு பசப்புகிறது.

சர்க்காரோ, பசப்பு கண்டு பல்லிளிக்கின்றனர் — பதைபதைப்புடன் நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் பல்லிளிக்கின்றனர்!

தங்களால்விசாரித்து அறியவேண்டிய விபரங்கள் குறித்து கமிஷன் தன் அறிக்கையிலே கூறியிருக்கிறது. ஆனால் அந்த 'வழக்குகள்' எவரெவருடையது, ஏமாற்றி எத்துவேலை செய்பவர் இவர்என்றவிபரம் இல்லை. சர்க்காரை ஏமாற்றும் பண முதலைகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை—பெயர்கள் தெரியாததால் அல்ல! தெரிந்தும் குறிப்பிடப்படவில்லை!!

பணமுதலைகளின் மானத்தை வெளிவிடாமற் காப்பதில் அவ்வளவு அக்கரை, ஆளவந்தாருக்கு!

X X X

பொதுஜன விரோதிகள்-எனவே புதுச்சட்டம் கொண்டுவருகிறேன்; தூக்கம் வரவில்லை என்று சோக கீதம் பாடினார். கலவரத்தில் ஈடுபடும் ஒரு சில கம்யூனிஸ்டுகளை அடக்க ஒரு புதுச்சட்டம் தேவையாக இருந்தது, அதுவும் அவசரமாக,நாட்டின் துணைப்பிரதமருக்கு!

நாட்டை அரித்துக்குலைக்கும் புல்லுருவிகள் பக்கத்திலேயே பவனிவீற்றுக்கொண்டிருக்கின்றனர் — படாடோபத்துடன்! முதலாளிகள் என்ற மோகனப் பெயருடன், சர்க்காரை ஏமாற்றிக்கொண்டு!

மக்கள் நலனுக்குத் தேவையான பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள்—நாட்டுக்குப் பயன்படாமல் தேக்கிவைத்திருக்கிறார்கள்!

உடனிருந்தே கொல்லும் இந்தக் "குடிலர்களின்" கொட்டம் அடக்குவது எப்படி? கோடிக்கணக்கில், வரி கொடாது மறைந்துகிடக்கும் பணத்தைக்கொண்டுவருவது எவ்விதம்? என்றயோசனைகள் இதயத்தைத் தாக்கி, சிந்தனையைக் குழப்பியிருக்க வேண்டும், சர்தார் பட்டேலுக்கு!

தேசப் பொருளாதார நிலையைப் பாழ்படுத்தும் பணமுதலைகளைப்பற்றிச் சிந்தித்து சிந்தித்து, தூங்காமல் துடித்திருக்க வேண்டும்! கண் விழித்து, வழி கண்டு புதுச்சட்டம் கொண்டுவந்திருக்கவேண்டும்!

ஆனால், மதிப்பிற்குரிய பட்டேல் இப்போது தூங்குகிறார்—சொஸ்தமாகத் தூங்குகிறார்! மனவேதனைப்பட்டு நெஞ்சு புண்ணாகியிருக்க வேண்டிய துணைப்பிரதமர், தூங்குகிறார்!

சுயநலத்திற்காக மக்கள் வாழ்வில் 'சூறாவளி'யைச் சிருஷ்டிக்கும் எவரும் சட்டப்படி தண்டிக்கப்படலாம்.

சட்டம் துணைக்கு இருக்கிறது—எனினும் சர்தார் தூங்குகிறார்!

* X *

தூக்கிலே தொங்கவிடுவோம்,விடமாட்டோம் பிடித்துவிடுவோம் என்று நாடதிர முழக்கங்கள் எழுப்பியவர்கள், நமது பட்டேலும், பண்டித நேருவும்!

தூக்கிலேகூட போடவேண்டாம்—நாட்டு நலனை நாசமாக்கும் பொதுஜனவிரோதிகளை! சர்க்காரை எதிர்த்து சாகசப்போர் புரியும் முதலாளித்துவ முதலைகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம்— சட்டம் துணைக்குநிற்கும், மக்கள் ஆதரவும் கிடைக்கும்!

நாட்டின்எதிர்காலத்தைப்பாழாக்கும் போக்கு கண்டால் 'தூக்கம் வரவில்லை' என்று பாதுகாப்புச் சட்டம் செய்த பட்டேல், தூங்கிக்கொண்டிருக்கிறார்!

தூக்கம் வரவில்லை என்று நாட்டு மக்களையெல்லாம் பாதிக்கும் பாதுகாப்புச்சட்டம் கொண்டுவந்த பட்டேல், இப்போது தூங்குகிறார்!பணமுதலைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதில், தூங்குகிறார்!

# திராவிட நாடு

ஞாயிறு] 23—4—50 [காஞ்சி


## பிரகாஷ்
### தரும்
## 'பிரகாசம்!'

★

"ஏராளமான பொருட் செலவில், பிரம்மாண்டமான காட்சிகளுடன், பிரகாஷ் பிக்சர்ஸ் தயாரித்த மகோன்னத........." படத்தின் விளம்பரம் போலும் இது, என்று தோன்றும் நண்பர்களுக்கு!

தலைப்பு 'பிரகாஷ்' தயாரித்துத் தரும் படமல்ல! பாடம்!!

அண்மையில் புது டெல்லியில் சொற்பொழிவாற்றியபோது 'பிரகாச'மயமான ஒரு உண்மையைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார் —ஜெயப்பிரகாஷ், இந்திய சோஷியலிஸ்டுக் கட்சித் தலைவர்

எச்சரிக்கை
புத்திமதி
யோசனை

ஆகியவைகளை வெளியிட்டிருக்கிறார், புதுடெல்லி சென்று பழைய சகாவான பண்டித நேருவைக் கண்டு பேசிவிட்டுத்திரும்பிக் கூட்டத்திற்கு வந்ததும்!

எச்சரிக்கை நாட்டுக்கு, புத்திமதி மக்களுக்கு, யோசனை சர்க்காருக்கு என்று 'பகுதி,பகுதி'யாகப் பிரித்துத் தந்திருக்கிறார், அச் சமதர்மவீரர்.

பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியால் பிரிவினையேற்பட்டது. ஆகவே தொடர்ந்து வகுப்புவித்தியாசங்களை நாமும் கையாண்டால் பல'பாகிஸ்தான்கள்' இங்கு உண்டாகும்படி ஏற்படும்.

திராவிடஸ்தான், அகாலிஸ்தான். போன்ற பிரிவினைக் கோரிக்கைகள் ஆங்காங்கு வளர்ந்து வருகின்றன.

பிளவு மனப்பான்மை எவ்வளவு மோசமாக வேலை செய்கிறதென்பதற்கு இவை உதாரணம்.

பல 'ஸ்தான்'கள் ஏற்படுமாறு விடக்கூடாது என்று எச்சரித்து, நாட்டில் பிரிவினை மனப்பான்மையிருக்கும் நிலையைக் கூறி, மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும்என்று புத்திமதி தந்திருக்கிறார் நண்பர் ஜெயப்பிரகாஷ் நாராயண்.

பாகிஸ்தான்பிரிவினையைச்சுட்டிக் காட்டி, அதன் பலாபலன்களை விவரித்து, 'ஆகவே நாட்டைப் பிரிக்கும் மோசமான சக்திகளை வளரவிடக் கூடாது' என்று எச்சரித்திருக்கிறார். பிரிவினை மனப்பான்மை தாண்டவமாடுவதால், 'இந்தியாவை ஒரு உன்னதமான நாடாக்கவேண்டும்' என்ற கனவு சிதைந்துவிடுமாம், கூறுகிறார்!

இந்திய—பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள புது உறவு நீடிக்கும் வழிவகைகள் கூறிக்கொண்டிருக்கும் நேரத்தில்—அதுவும் புது டெல்லியில் — திராவிடஸ்தான் கோரிக்கையைப் பிரகாசமானதாக்கியிருக்கிறார், பேசும்பொழுது!

'பிரகாசம்' செய்தபோது, 'பிளவு சக்தியின் கொடுமை, வகுப்புப் பூசலின் விளைவு' ஆகியவைகள் குறித்து இதோபதேசம் செய்திருக்கிறார்— பிரகாஷ் அவர்களின் பேச்சைக் காணும்போது, அது அவர் சர்க்காருக்குத் தந்த ஒரு எச்சரிக்கைபோல இருக்கிறது!

திராவிடஸ்தான் கோரிக்கை— மோசமாக வேலைசெய்யும் பிளவு சக்தியாம், கூறுகிறார், அவர்—மக்களின் உரிமைக்காகப் பாடுபடுவதாக மார்தட்டிக்கொண்டிருக்கும் ஜெயப்பிரகாஷ் நாராயண்.

இந்தியா ஒரே நாடு, பிரித்தால், சீரழிந்துவிடும்!—இது நமது கோரிக்கையை எதிர்க்கும் காங்கிரசாரும் ஏனையோரும் கூறும் காரணம்.

அதே காரணத்தை இப்போது ஜயப்பிரகாஷ் கூறுகிறார்—கொஞ்சம் மழுப்பலோடு!

X X X

எல்லோரும் இந்தியர், இது இந்தியநாடு என்ற தேசியம் பேசப்படுகிறது, பலரால்!

ஆட்சிப்பீடமேறிய ஆளவந்தார், அவர்களுக்குப்பக்கத்துணை நிற்கும் வடநாட்டு முதலாளித்துவம், காங்கிரஸ் கட்சி—எல்லோராலும் 'தேசியம்' என்ற வார்த்தை உச்சரிக்கப்படுகிறது! தேசிய நலன், தேசியப் பொருளாதாரம், தேசியத் தலைவர், இதுபோல எதற்கெடுத்தாலும் "தேசியம்" இவர்கள் நாவில் தாண்டவமாடுகிறது!

நாடு பெரிதாக இருந்தால், தன்னிஷ்டப்படி பொருள்களை விற்று இலாபக் கொள்ளை அடிக்கலாம் — இது 'ஆலைபெருத்தானின்' ஆசை!

இவ்வளவு பெரிய நாட்டை நாம் ஆளுகிறோம்—இங்கு வாழும் இத்தனைகோடி மக்களும், நம் ஆட்சிக்குள் அடங்கியிருக்கிறார்கள்—இதை இழப்பதா? நாட்டைப் பிரிப்பதா?— ஆட்சிப்பீடமேறியோரின் அதிகார ஆசை!

சுரண்டிக் கொழுப்பவனும், அதிகாரம் செய்பவனும் தனது கட்டுப்பாடும் பெருமையும் விரிந்துகிடக்க வேண்டும் என்று விரும்புவார்களே தவிர, 'போதுமென்ற மனமேபொன் செய்யும் மருந்து' என்றிருந்துவிடமாட்டார்கள். அதுவும் இந்தியா— பெரியநாடாக ஒப்புவிக்கப்பட்டுவிட்டது, காங்கிரஸ் ஆளவந்தாரிடத்தில். எனவே, காங்கிரஸ் மேலிடத்தில அமர்ந்திருக்கும் வடநாட்டார் இந்தியா முழுமையும் தங்கள் கைக்குள்ளிருக்கவேண்டும்என்று ஆசைப்படுகின்றனர்.

இந்தியத் தொழில் துறையும் வடநாட்டார்வசமேஇருக்கிறது. எனவே வடநாட்டு முதலாளித்துவமும் "தேசியம்" பேசுகிறது, தனது வியாபாரம் இந்த பரந்த நிலப்பரப்பு முழுதும் நடைபெறுமே இந்தியா ஏகநாடாக இருந்தால் என்ற எண்ணத்தால்!

ஆட்சியைநிர்வகிப்போரும்,பணம் பெருத்தான்களாயிருப்போரும்— வடநாட்டினர்.

எனவே, வடக்கு, தெற்கைத் தன் பிடியில் அடக்கி வைக்க ஆசைப்படுமேயொழிய, இழந்துவிட சம்மதிக்காது.

தேசியம் — வடநாட்டு அதிகாரவர்க்கத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் ஒரு திரை, நமது கோரிக்கையை மறைப்பதற்கு!

மக்களை வசீகரிக்கச் சுரண்டுபவன்

வீசும் வலை, அது! அந்த வலையை இப்போது வீசத் துவங்கி இருக்கிறார், சமதர்மக் கட்சித் தலைவர்!

"தேசியம்" என்ற வார்த்தையின் திருவிளையாடல்களை அறியாதவரல்ல, ஜெயப்பிரகாஷர் — தொழிலாளர்களின் நலன் பேசித்திரியும் நண்பர். எனினும், தேசியம் பேசுகிறார், திராவிடஸ்தான் முதலிய பிரிவினைகளால் நாட்டின் ஐக்கியநிலை பாழாகிவிடுமாம் — போதிக்கத்துவங்கி இருக்கிறார்.

டாடாவுக்கும், பிர்லாவுக்கும் டால்மியாவுக்கும் இருக்கவேண்டிய கவலை இப்போது இச்சமதர்ம வீரருக்கு எழும்பியிருக்கிறது.

பட்டேலும், நேருவும் பேசவேண்டிய வார்த்தைகளை முற்போக்குக் கட்சியின் தலைவர் கூறுகிறார்.

X X X

பிரகாஷ் பேச்சு — வடநாட்டினரின் கருத்தை, வார்த்துத் தரும் சொல்! முற்போக்குக் கொள்கைகளைப்பேசிவரும் சமதர்மக்கட்சியின் போக்கைக்காட்டும், ஒருவிளக்கம்!

பிளவு ஏற்பட்டு விடுமாம், மோசமான நிலை உண்டாகிவிடுமாம், நாட்டின் சுபீட்சம் நாசமாகி விடுமாம் — மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதாகப் பேசும் சமதர்மத் தோழர் கூறுகிறார்.

* * *

திராவிடநாடு தனிநாடாக வேண்டும் என்ற கோரிக்கை—பிரிட்டிஷ் சர்க்காரின் பிரித்தாளும் சூழ்ச்சியின் சிருஷ்டியல்ல!

வாழ்விழந்து, சுகமிழந்து, துயரப்பிம்பங்களாய் உலவும் திராவிட மக்களின் இதய முழக்கம்!

வகுப்புணர்ச்சியின் அடிப்படையிலே எழுப்பியதல்ல—திராவிடம், தேன் மலர்ச்சோலையாக வேண்டும் சுயநலமிகளின் சுரண்டல் கூடமாகி விடக்கூடாது என்ற வேதனையிலே உதயமாகியது நமது கோரிக்கை!

பண்டைய நிலை
தனிக் கலாச்சாரம்
பொருளாதாரம்

இவைகளைச் சிந்தித்துப் பார்த்ததின் விளைவாக, வாழ்ந்தவர் நாம்—வாழ்விழந்தோம், வகையென்ன இதற்கு? என்ற கேள்விகளோடே வெடித்த எதிரொலி, அது!

வயலுக்கு வரம்பு, எங்கள் நாட்டுக்கொரு எல்லை—என்று கேட்பது நமது கோரிக்கை.

வடநாட்டினரின் வாழ்வு உயர்கிறது—எங்கள் வாழ்வு சிதைகிறது—இது ஏன்? என்ற பொருளாதாரப் பிரச்னையிலே கிளம்பியது.

அரசியலில் அடிமை, பொருளாதாரத் துறையில் வறுமை, வளர்ந்துகொண்டே போகிறது எம்நாட்டில்—வாழ்ந்தவர்கள் நாங்கள், இன்று வலிமை இழந்து விட்டோம்—இந்நிலை மாறவேண்டும், எங்கள் நாடு எங்களுக்காக வேண்டும் என்ற இதயகீதம் நமது திராவிடஸ்தான் கோரிக்கை.

உரிமை முழக்கம் — மோசமான கோரிக்கையாகப் படுகிறது, வடநாட்டு முதலாளித்துவத்துக்கு மட்டுமல்ல, ஆட்சிப் பீடத்துக்கு பட்டுமல்ல—மக்களுரிமை பேசிவரும் முற்போக்குக் கட்சித் தோழர் ஜயப்பிரகாஷருக்கும்.

* * *

உரிமை முழக்கத்தை உதாசீனம் செய்யலாம்; உரத்தக்குரலெடுத்துப் பேசி வெளிக்குத் தெரியாமல் மறைத்துவிடலாம்; ஆனால் அது வெட்ட வெட்ட ஊறும் நீர் ஊற்று. அடிக்க அடிக்க உந்தியெழும் பந்து!

திராவிட நாடு கோரிக்கை, பலரால் கேலிக்குரியதாகக் கருதப்பட்டது. இப்போதோ அதன் எண்ணங்கள் எதிர் முகாமிலே கூட அரும்பியிருக்கின்றன!

புது அரசியலமைப்புப்படி மாகாணங்கள்—மத்திய சர்க்காரின் கீழ் சாதாரண ஜில்லாபோர்டுகள் போல ஆகியிருக்கின்றன.

மாகாணங்களின் அதிகாரம் மத்திய சர்க்காரால் கொஞ்சங் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது.

பொதி சுமக்கும் மாட்டின்மீது, மேலும் மேலும் பளுவை வைத்துக்கொண்டேயிருந்தால்—அது, சண்டித்தனம் செய்யத்தான் துடங்கும். கூண்டிலடைக்கப்பட்டபுலியின் மீது குச்சி கொண்டு குத்திக்கொண்டேயிருந்தால்— சிறுமலிருக்காது! கூண்டைவிட்டு வெளியேற நேரமும் வேளையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கும்!

இந்தக் காட்சி, சென்னைமாகாண சர்க்காரின் விவகாரங்களில் மத்திய சர்க்கார் தலையிடும்போதெல்லாம் உருவாகிக்கொண்டுதானிருக்கிறது.

X X X

அண்மையில் இந்திய சட்டசபையிலே ஒரு நாள் 'புயல்' வீசியிருக்கிறது. ஐக்கிய மாகாணம் அதிக விலை வைத்து சென்னைக்கு அரிசி விற்றது குறித்து—விவாதிக்கப்படுகையில் சென்னைப் பிரதிநிதிகளிடை எழும்பிய சீற்றத்தையும், மத்திய சர்க்கார் சார்பில் தரப்பட்ட பதில்களையும் கூர்ந்து கவனிக்கும்போது இந்த உண்மை விளங்கும்.

சீறிடும் சிங்கங்களாகப் பாய்ந்திருக்கின்றனர், எப்படி சென்னையை ஏமாற்றலாம் ஐக்கியமாகாண சர்க்கார், இதற்கு உடந்தையாக இருக்கலாமா இந்திய சர்க்கார் என்று எழும்பியிருக்கும் கண்டனங்கள் 'உரிமைக் கீதத்தின்' விளைவுதான்!

> ஐக்கிய மாகாண சர்க்கார் மன்னிப்பு கேட்டிருக்கவேண்டும்.
>
> இந்திய சர்க்கார் எப்படி இந்த அக்கிரமத்தை அனுமதித்தது? இந்திய சர்க்காருக்கு அதட்டிக் கேட்க தைரியம் வரவில்லையென்றால், சென்னை சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை இந்திய சர்க்காரே கீழே வைத்துவிட வேண்டும்.

"தினசரி" தீட்டியிருக்கிறது, தனது தலையங்கத்தில் இவ்வளவு ஆத்திரத்துடன்!

'ஏமாற்றுதலுக்கு இலக்காகிவிட்டோம்' என்ற உண்மை உணர்ந்ததும், கண்டனக்கணைகள் புறப்பட்டிருக்கின்றன—எதிர்க் கட்சிக்காரர்களால் அல்ல—காங்கிரஸ் கட்சியினராலேயே!

X X X

மொத்தம் சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை 5 கோடியே 34 லட்சமாகும்! புது அரசியலமைப்புப்படி சட்டசபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது குறித்து, இந்திய சர்க்கார் ஒரு மசோதாகொண்டு வரவிருக்கிறது—இம்மாகாணத்தின் சட்டசபையில் 300 உறுப்பினர்

களிருக்கலாம் என்று அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது!

"75,000-மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் மாகாண சட்டசபைக்கு உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப் படலாம்" என்று இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தால் மொத்தம் 712 உறுப்பினர்கள் சென்னைச் சட்டசபையிலே இருக்கவேண்டும். ஆனால், இந்திய சர்க்காரோ 300 உறுப்பினர்கள் இருந்தால் போதும் என்று சட்டம் செய்ய யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்!

"எந்த மாகாணச் சட்டசபையிலும் 500 உறுப்பினர்களுக்கு மேலிருக்கக்கூடாது" என்றும் அரசியலமைப்பில் குறிப்பு ஒன்று இருக்கிறது. எனவே, சென்னை மாகாணத்துக்கு 712 உறுப்பினர்களுக்குப் பதில் 500-க்குக் குறைவாகவே தீர்மானித்து முடிவு செய்யவேண்டியதாயிற்று.

ஆகவே, ஆரம்பத்தில் சென்னை மாகாணத்துக்கு 375-உறுப்பினர்கள் இருக்கலாம்—என்று மத்திய சர்க்கார் முடிவு செய்திருந்தனர்.

இப்போது அம்முடிவு மாற்றப்பட்டு 300-உறுப்பினர்கள் போதும்—என்ற யோசனையிலிருக்கிறார்கள், மத்திய சர்க்கார். இந்த யோசனை கேட்டதும் சென்னை சர்க்கார் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் — 712-க்குப் பதில் 375-வது இருக்கட்டும்! 300 என்பதை எப்படியேற்க முடியும்? யோசனையைப் பரிசிலனை செய்யுங்கள் என்று எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மத்திய சர்க்காரின் யோசனையைக் குறித்து "தினமணி" தீட்டுகிறது தலையங்கம் — தனது எதிர்ப்பைத் தெரிவித்து! பத்திரிகைகளின் ஆட்சேபம், மாகாணசர்க்காரின் எதிர்ப்பு ஆகியவைகளுக்குப் பின்னர், இந்திய சர்க்கார் முன்பு தெரிவித்தபடியே 375 பிரதிநிதிகளிருக்கலாமென முடிவு செய்திருக்கின்றனர்.

எதிர்ப்பும் கண்டனமும் மத்திய சர்க்காரைப் பணியவைத்திருக்கிறது.

உரிமையைப் பறிக்கும் முடிவைக் கண்டதும் மாகாண சர்க்காரே எதிர்க்கிறார்கள்—தேசீய இதழ்களே கண்டிக்கின்றன.

X X X

இந்த நிலை, இப்போது அடிக்கடி ஏற்படுகிறது மாகாணத்துக்கும் — மத்திய சர்க்காருக்கு மிடையே!

தனது பொருளும்—உரிமையும் பறிபோவது தகாது! ஆகாது! தடுக்கப்படவேண்டும் என்பதுதான் நமது தனிநாட்டுக் கோரிக்கையின் தத்துவமாகும்.

'தனி நாடு' என்றதும் தத்திக் குதிக்கும் உத்தமர்கள் உள்ளத்தில் 'உண்மையாகவே உரிமையும் பொருளும் பறிபோகிறது' என்பது தென்பட்டதும் எதிர்க்கிறார்கள்—கண்டனத்தைத் தெரிவிக்கிறார்கள்.

இன்று உதயமாகும் இந்தக் காட்சிகள் எதிர்காலத்தில் இன்னும் அதிகரித்தமே யொழிய அடங்கிவிடாது! அணைந்தும் விடாது!!

ஆனால், ஜெயப்பிரகாஷரோ "உரிமை கீதம்" ஒலிப்பது என்று கூறுகிறார்—வடநாட்டு முதலாளித்துவத்தைப்போல, ஆளவந்தாரைப்போல!

அகண்ட தேசியம் பேசுகிறார்—தேசியம் எப்படி நாட்டின் ஒரு பகுதி மக்களின் வாழ்வைச் சூறையாடுகிறது என்று அறிந்தும்!

முற்போக்குக் கட்சியின் வரிசைகளின் முன்னணியில் நிற்பதாகக் கூறப்படும் சோஷியலிஸ்டுத் தலைவருக்கே, 'அகண்ட தேசியத்தின்'மீது ஆசை இருக்கிறது — உரிமைவேட்கைகொள்வது கூடாது என்று உபதேசம் செய்யக் கிளம்புகிறார்!

உபதேசம் பலிக்காது — அதில் உயிர் இல்லாததால்!

## வெகு அழகு!

கடன் பத்திரத்தில் கையொப்பமிட்டுத்தந்து விட்டார், விஜயலட்சுமி அம்மை—இந்திய சர்க்கார் சார்பில்.

கடன்பத்திரத்தில்கையெழுத்துப் பெற்றுக்கொண்ட சர்வதேசபாங்கியும் இந்தியாவுக்கு ரூ 8,80,60,000 கடன்தர சம்மதித்து விட்டது.

அம்மையார் கையெழுத்திட்டதும், அதையொட்டி இந்தியாவுக்கு கடன்தர சர்வதேச பாங்கி சம்மதித்ததும் இது முதல் முறையல்ல —மூன்றாவது முறை!

ரூ. 16,18,40000—1949 ஆகஸ்டு 18-ந் தேதியன்று சர்வதேச பாங்கியிடமிருந்து இந்தியாவுக்கு முதல்தடவையாகக் கடன் வந்தது. இது இந்திய ரயில்வே முன்னேற்றத்துக்கு என காரணம் காட்டப்பட்டது, சர்க்காரால்.

ரூ 5-கோடி—அதே ஆண்டு செப். 29-ந்தேதியன்று 'இரண்டாவது கடன்' இந்தியாவுக்கு வந்தது. 'இது ஏன் தெரியுமா? விவசாய உற்பத்தியின் முன்னேற்றத்துக்கு' என்றனர் இந்திய சர்க்கார்

இப்போது, மூன்றாவது தடவையாகப் பணம் கிடைத்திருக்கிறது—இனமாக அல்ல! கடனாக!!

சர்வதேச பாங்கி, இந்தியாவுக்கு இவ்வளவு தொகையும் கடன் தந்திருக்கிறது — கோமுட்டிச் செட்டியார் குப்பனுக்கு கடன் தருகிறாரே, 'கடன் பத்திரம்' எழுதி வாங்கிக் கொண்டு, அதைப்போல!

(1) வாங்கியிருக்கும் தொகையை இருபது ஆண்டுக்குள் இந்தியா திருப்பிக் கொடுக்கவேண்டும்.

(2) நூற்றுக்கு மூன்று சதவிகிதம் வட்டிபோட்டுத்தரவேண்டும்.

(3) பணத்துக்கு மட்டுமல்ல வட்டி—பணம் தந்ததற்காக பாங்கிக்கு நூற்றுக்கு ஒரு சதவிகிதம் வீதம் கமிஷனும் சேர்த்துத்தரவேண்டும்.

இத்தனை நிபந்தனைகளுடன் கடன் வாங்கியிருக்கின்றனர் — அந்நியனை விரட்டி ஆட்சிப்பீடமேறிய சுயராஜ்ய சர்க்கார்!

✶

'கடன் வாங்கினேன்' என்று அமெரிக்காவில் விஜயலட்சுமியார் கையெழுத்திட்ட அதே நாளில் இந்திய சட்டசபையில பர்மாவுக்கு கடனாக ரூ 1,83,33,000 கொடுப்பது என்ற கோரிக்கை கொண்டு வரப்பட்டு நிறைவேறியிருக்கிறது. பர்மிய சர்க்காரின் கட்டுப்பாட்டுக்குள் இரங்கூனைச் சுற்றி 60-மைல்

(12-ம் பக்கம் பார்க்க)

# ★ விவசாயியும் 'விருத்தமும்' ★

[ராஜாங்கம்]

உழவனின் 'ஏரடிக்கும் சிறுகோல்' தரும் 'பெரிய செல்வ'த்தின் துணைகொண்டு, நாட்டிலே போக போக்கியங்கள் குவிகின்றன. ஏழை உழவனின் உழைப்பு—மாளிகைகளில் வாழும் 'உல்லாசிகள்' உடலுக்கு அழகு மெருகேற்றும் தங்க நகைகளாக மாறுகிறது — செல்வச்சீமானின் சிங்கார பவனிக்குப் பயன்படும் மோட்டாராகிறது!

உழைக்கும் கலப்பைத் தொழிலாளர்கள், காலமெல்லாம் பாடுபட்டு வரப்பே தலையணையாய், வாய்க்காலே பஞ்சு மெத்தையாய், வானமே போர்வையாகக் கொண்டு வதைகிறார்கள். அவர்களில் எவருமே 'முழுவாழ்வு' வாழ்வதில்லை. அப்படிப்பட்டவர்களைத்தான் ஏமாற்றப் பார்க்கிறார்கள்—உழவின் பெருமைப் பதிகம் படித்துக் காட்டி:

"உழவுத் தொழில் பருவ காலங்களுக்கிடையே நடத்தப்படும் ஒரு சூதாட்டம்"—என்கிறார் பொருளாதாரத் தந்தை, ஆதம் ஸ்மித். எதிர்பார்க்கும் அளவுக்கு மழை பெய்யாது போனால், அல்லலுறும் மக்கள் தொகை அதிகம் இந்நாட்டில். இதற்கு உண்மையான காரணம், ஏறத்தாழ நூற்றுக்கு 68 பேர்(68%) விவசாயத்தை நம்பி வாழ்வதுதான்!

இந்தியா, மிகப் பழையநாடு. அதிலும் கிராமங்களே பெருவாரியாக உள்ள இடம். ஒரு நாட்டின் பண்பாட்டை தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் அந்த நாட்டின் கிராமத்தைத்தான் காணவேண்டும். இந்தியாவின் 'உயிர் மூச்சு' இருப்பது கிராமத்தில்தான் — என்றெல்லாம் பேசுகிறார்கள்.

உழைப்பவன்,ஏழையாய், அடிமையாய், பாமரனாய், மாமிசப் பிண்டமாய் வாழும் நிலைக்குக் காரணமென்ன? பாடுபடுபவனை முன்னேற்றப் பாதைக்குச் செல்லவொட்டால் பிடித்தழுத்தும் சக்திகள், வறுமை, அறியாமை, நோய், கடன், மூடநம்பிக்கைவிவசாயிகளிடையே 'வேளாண்மைக் கடன்' [Rural indebtedness] என்று ஒன்றிருக்கிறது, அது விவசாயிகளைப் பொருத்தமட்டில், ஒரு தவிர்க்க முடியாத 'புற்று நோய்'—தடைப்படுத்த முடியாத 'தொத்து நோய்'—கருவறுக்கும் 'காச நோய்'!

இந்த வேளாண்மைக் கடனுக்குக் காரணம் என்னவென்று இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயியின் நிலத்தின் அமைப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கிற காரணத்தால், அவனது உழைப்பு பயன்படாது போய்விடுகிறது. உழவனின் உழைப்பின் அளவு பெரிதாக இருந்தும், நிலத்தின் அளவு குறைவாக இருப்பதின் காரணத்தால்—அவன் உழைப்பு விழலுக்கிறைத்த நீராகிறது. அந்த வேற்றுநிலம் தரும் செல்வம் அவன் வாழ்க்கைச் செலவுகளை ஈடுபடுத்த முடியாத நிலையில்—அவன் வட்டிக்குப் பணம் தரும் பிரபுக்களின் வாயிலிலே காத்து நிற்க வேண்டிய நிலைக்கு வந்து விடுகிறான்.

பயிரிடும் மாதங்கள் தவிர, ஆண்டில் குறைந்த அளவு ஓரிரண்டு மாதங்களாவது,விவசாயி 'சோம்பேரி'யாகத் திரியவேண்டியிருக்கிறது. இந்த இடைக்காலத்தில், சிறு நிதி சேர்ப்புக்கு உதவி வந்த சிறு கைத்தொழிலும் [Handi Craft] சிதைந்து போன காரணத்தால், பயிரிடும் விவசாயியின் நிலை மேலும் சிக்கலாகிவிடுகிறது.

'விவசாயம்,பருவ மழைகளிடையே நடத்தப்படும் ஒரு தேர்தல். எனவே 'பருவ மழை' தவறும்போது, விவசாயி கடன்காரனாக வேண்டிய நிலைக்கு பிடித்து உந்தப்படுகிறான். ஒரு விவசாயி,தொடர்ந்து ஐந்தாண்டுகள்,பயிரிடுவதாக வைத்துக்கொண்டால், அந்த ஐந்தாண்டுகளில் நல்ல விளைச்சலைத் தரும் ஓர் ஆண்டும், ஏமாற்றத்தைத் தரும் பிறிதோர் ஆண்டும் போக நல்லதும் கெட்டதும்அற்ற ஆண்டுகள் மூன்று' என்று பொருளாதார அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

நோய்க்கு இரையாகி மாண்டு போகும் கால்நடைகளின் [Periodical loss of Cattle] தொகையை ஈடுபாடு செய்ய கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை—விவசாயிக்கு!

கிராமங்கள் சுகாதாரத்தின் எதிர்ப்பிடம்! நாகரீகத்தின் வாடை எட்டாத இடம்! அங்கு கவனிப்பாரற்று தேங்கிக் கிடக்கும் நீர்த் தேக்கங்கள், மலேரியாவின் 'தாயாரான' கொசுக்கள் வட்டமிடும் அரங்காக காட்சியளிப்பதால், மலேரியாவின் வருகை அங்கு சாதாரணசம்பவம்உழைத்துப் பாழானது போக எஞ்சியிருக்கும் சக்தியையும் இந்த 'மலேரியா நோய்' உழவனிடமிருந்து பறித்து விடுகிறது.

"இவர் நம்ப ஊர் மணியக்காரர் மகன்—அவர் திட்டக்குடி ஜமீனின் இளைய ஜமீன்தார்"—கிராமப் பக்கங்களிலே இப்படிஉரையாடல்கள் நடத்தப்படுவதுண்டு.

தந்தை ஜமீன்தாராக இருந்தார்—தனயனுக்குக் கிடைக்கிறது அதே 'ஜமீன்தார்' பட்டம். அப்பா, மணியமாக ஆட்சி புரிந்தார்—மகனுக்கு வருகிறது 'மணியக்காரர்' பட்டம்.

தந்தை சுமந்த பட்டம், தனயனுக்கு 'உரிமை'யாவது போல—இந்த ஏழை விவசாயிகளின் வாழ்வில், தந்தை வைத்துப்போன கடன் சுமையைத் தாங்கும் 'பொறுப்பும் உரிமையும்' வந்துவிடுகிறது. இந்தக் கடன் சுமையைத்தான் 'பரம்பரைக் கடன்' [Ancestrol debts] என பொருளாதாரம்கூறும். விவசாயிகள் எல்லோருமே தந்தை பட்ட கடனை அடைக்கும் 'சித்தரஞ்சனதாசர்'களாக மாறமுடிவதில்லை!

அப்பன் வைத்த கடன் மகனுக்கு—மகன் அடைக்கமுடியாது திணறுகிற காரணத்தால்—அவன் மகனுக்கு, இப்படி 'பரம்பரைக் கடன்' ஒரு தொடர்ச் சங்கிலியாக நீளுகிறது!

விவசாயிகளின் 'தற்குறித்'தனமும், கடன் தொல்லைக்கு ஒரு காரணம். ஐம்பது ரூபாய்க்குச் சீட்டெழுதிக்கொடுத்துவிட்டு கடன்வாங்குகிறான் விவசாயி. பத்திரத்தை எழுதுவது அவனல்ல—அவனால் எழுத முடியாது; தெரியாது, படிப்பறிவில்லாத காரணத்தால்!

"பணம் கொடுத்த" பிரபுவின் கணக்கன், எழுதிப் படித்தான் எதையோ! 'கைக்குறி' அவன் காட்டிய இடத்தில் வைத்தான், அந்த அளவுதான் அவனுக்குத் தெரியும்; புரியும்!

இந்த முறையில் உள்ள 'சிக்கல்'களெல்லாம் கடன்தீர்க்க வரும் பொழுதுதான் பிறக்கிறது. ஐந்து மாதத்திற்குமுன் (50) ஐம்பதாக காட்சியளித்ததொகைஅப்பொழுது பக்கத்திலே ஒருவட்டம் (0) சேர்க்கப்பட்டு, (500 ரூபாய்) ஐந்நூறாக காட்சியளிக்கும்—பக்கத்தில்!

பிறகு—வழக்கு — நீதிமன்றம்—தீர்ப்பு;—விவசாயியின் நிலம் பறிக்கப்படும் சோக நிலை!

அறுதியாக விவசாயிகளின் நெஞ்சிலே நீண்ட நாட்களாகஊறிப்போன மூடப்பழக்க—வழக்கங்களும் இந்த கடன்தொல்லைக்கு ஒரு குறிப்பிடக்கூடிய காரணமாகும்!

விவசாயி தன் 'அவல' வாழ்வைப் பற்றிக்கூட அவ்வளவாக கவலைப்படுவதில்லை. "ஊர்க்கோடியிலே இருக்கிற வேப்பமரத்தின்கீழ் உள்ள 'அம்மன் கோயில்' இந்த வருஷம் புதுப்பிக்க வேண்டும். ஊரார் முயற்சி செய்யாவிட்டாலும், கடன் வாங்கியாவது தான் கட்டியாகவேண்டும்" – என்று திட்டமிடுகிறான். அதில் அவனுக்கு அவ்வளவு அக்கறை!

ஒட்டிய கண்கள் — ஒடுங்கிய வயிறு—தரிசாகிப்போன நிலம் — நீரில்லாக்கிணறு – நினைக்கநேரமிருக்காது அவனுக்கு!

அவன் நினைப்பெல்லாம், 'திருப்பதி யாத்திரை' போகவேண்டுமே, அதற்குக் கடனுகப் பணம், பக்கத்து, வீட்டுக்காரனிடம் வாங்கலாமா? அல்லது 'பங்காருசெட்டி'யாரைநாடலாமா?' என்பதாகத்தான்இருக்கும்.

கட்ட ஆடை இருக்காது—வீசும் வாடையின் கொடுமையைத் தடுக்க மெய்யை, கையால் போர்த்துக் கொள்வான். அவன் 'நிலை' 'அம்மனுக்கு மஞ்சள்ஆடை சார்த்தவேண்டுமே' என்ற நினைப்பைத் தாழ்த்தாது!

விவசாயியின் 'அவலநிலை' மாற, அவன் வாழ்வில் நிலவும் வறுமையையும், கடனையும் களைந்தெறிய "ஜமீன் ஒழிப்பு"மட்டும் போதாது. ஏதோ சில திட்டங்கள் சட்டமாக்கப் பட்டால்மட்டும் போதாது!

அவன்நெஞ்சைக்கப்பியுள்ள'அறியாமை இருளை'யும் அகற்றியாக வேண்டும். அதற்கு "நன்றாக உழை! உழைப்பதே புண்ணியம்!" என்ற பசப்புச் சொற்கள் மறைந்தாக வேண்டும்.

"உரிமையைக்கொடு, ஊர் சீர்ப்படும்." என்ற 'பகுத்தறிவுபோதனை' அவர்களுக்குத் தரப்பட்டாக வேண்டும்.

மேலை நாடுகள் பொன் கொழிக்கின்றன, இந்த ஏரடிக்கும் சிறு கோலின் துணைகொண்டு. அறுக்க ஒரு யந்திரம்—அடிக்க ஒன்று—என்ற முறையில் இயந்திர சாதனத்தை உழவுத் தொழிலுக்கு 'சாதக'மாக பயன்படுத்திக் கொண்ட காரணத்தால், அந்த 'பணப்பெருக்கம்' சாத்யமாகிறது! அவர்கள் விதை தூவுவதுகூட விண்ணில், விமானத்தில் வட்டமிட்டுக் கொண்டு தானே!

ஆனல்—இங்கோ.........? அவுரங்க சீப்பும், அக்பரும் ஆண்ட காலத்தில இருந்த கலப்பையின் உருவத்தை மாற்றி அமைக்கும் அளவுக்குக் கூட "முன்னேற்றம்" அடையாமல் உள்ளனர், இந்த நாட்டு விவசாயிகள்!

இந்நாட்டில், ஒருகோடி எழுபது இலட்சம் ஏக்கர் நிலம் தரிசாகக்கிடப்பதின் காரணம், விஞ்ஞானத்தின் அவசியம் தேவையான அளவுக்கு பயன்படுத்தப்படவில்லை என்பது தானே, பொருள்! விஞ்ஞானமும், விவசாயமும் பிரித்தால, உயிர் வாழாத 'இரட்டைக் குழந்தை'கள் என்ற உண்மையை இந்நாட்டு விவசாயிகள் புரிந்துகொள்ளும்வரை, இந்நாடும், இந்நாட்டின் பொருளாதாரமும், வாழ்க்கைத் தரமும் குறைந்தேதான் இருக்கும்—வளர்ச்சியுராது!

இந்தச் சீர்கெட்ட நிலைமையிலிருந்து இந்த நாடு மீட்கப்பட்டால் தான், பொன் விளையும் பூமியாகத் தோன்றும்.

விவசாயியோ வேதனையால் சிதைந்துச் சீரழிகிறான் — ஆனல், சர்க்காரோ 'உணவுற்பத்தியைப் பெருக்குங்கள், பெருக்குங்கள்!' என்று ஓயாது விருத்தம் பாடிய வண்ணமேயுள்ளனர்.

மெலிந்த மாடு, ஓடிந்த கலப்பை' வறுமை பிணைந்த வாழ்வு, அலைக்கழிக்கும் அறியாமை அகலவேண்டும்—அதற்கான 'சிறு திட்டம்கூட' வகுக்காத சர்க்கார், விருத்தம் பாடுவதில் மட்டும் சளைப்பதில்லை!

விருத்தம் விளைச்சலைத் தராது—ஏர்முனையைத் திருத்திவிடாது.

✻

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

விஸ்தீர்ணமுள்ள பிரதேசம்தான் இருக்கிறது—செழிப்பு வாய்ந்தது 'நெற்களஞ்சிய' பிரதேசங்கள்யாவும் கிளர்ச்சிக்காரர்கள் வசமாகிவிட்டன—என்பதாக செய்திகள் வந்து கொண்டுள்ளன!

புயலில் சிக்கி, 'இப்போதோ இன்னும் கொஞ்ச நேரமோ' என்று திண்டாடிக்கொண்டிருக்கும் பர்மிய சர்க்காருக்குக் கடன் தருகிறார்கள், இந்திய சர்க்கார்!

பர்மா, ஏற்கனவே கடனாளியான நாடு — இந்தியாவுக்கு பர்மாதர வேண்டிய தொகையான 64-கோடி ரூபாய் அப்படியே இருக்கிறது

இந்தியாவும் பர்மாவும் இணைந்திருந்ததல்லவா, ஒரேநாடாக! அது மாறி, இரண்டும் இரு நாடுகளாக ஆக்கப்பட்டு இரண்டு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டபோது, இந்தியாவுக்கு பர்மா தரவேண்டிய தொகையென குறிப்பிடப் பட்டது, அத்தொகை. இதுவரை இன்னும் கொடுக்கப்படவில்லை — பர்மாவால். இந்திய சர்க்காரின் கணக்கில் பர்மா தரவேண்டிய தொகை ரூ 64-கோடி ரூபாய் என்று எழுதப்பட்டபடியே இருக்கிறது.

இந்நிலையில், இப்போது மேலும் கடன் தருகிறது, 'கருணை மூர்த்தி' என்ற பெயருக்கு ஆசைபபட்டு!

வெளியிலிருந்து தன் நாட்டுத் தேவைகளைக் கவனிக்க வேண்டும் என்று காரணம் காட்டி பணம் வாங்குகிறது, கடன் பத்திரம் எழு திக்கொடுத்து விட்டு; இந்திய சர் கார்!

அதே நேரத்தில் வரவேண்டி பணத்தை வசூலிக்க ஏற்பாடு செ யாது, மேலும் கடன் தருகிறது!

வாங்குகிற பணத்துக்கு வட் கொடுக்கிற பணத்துக்கோ வட் கிடையாது!!

வீட்டிலே பட்டினி; வெளியிலே விருந்து!

வெகு அழகாயிருக்கிறது!
இதுதான் சுயராஜ்யமாம்!!

## வேந்த புண்ணிலே வேல்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

நேரமே, தனது ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள அருமையானவேளை—என்று, அவல நினைப்பை அணைத்துக் கொண்டு புறப்படப் போகிறார்களாம் ஆட்சியாளர்கள் இந்தியைக் கட்டாயபாடமாக்க!

தகவல், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது, 'மணாளன்' என நம்பிய மாதரசியை எட்டியும்பாராது எங்கேயோ கிடக்கும் 'எச்சிலைக்' கொஞ்சப்போனானே, அதைவிடக் கொடுமையானது.

அமைச்சரின் யோசனை குறித்து திருச்சி "தமிழர் நாடு" தீட்டுகிறது—:—

"சென்னை அரசாங்கத்தினர் தங்கள் பாட திட்டத்தில் மாறுதல் செய்து, இந்தியைக் கட்டாய பாடமாக வைத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. பள்ளிகளில்முதல் வகுப்புமுதல், ஆறாவது வகுப்புவரை இந்தி கட்டாயபாடமாகப் போதிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது...

தமிழ்நாட்டில் இந்தியை எதிர்ப்பவர்கள், இந்தி தேவையில்லாதவர்களுக்குத் தேவையில்லை யென்றே கூறுகிறார்கள். இந்த உரிமைகூட தமிழனுக்கும் தமிழ் நாட்டிற்கும் இல்லையென்றால் 'சுதந்திரம்' என்பதிலும் 'உரிமை' என்பதிலும் 'சுதந்திர உரிமை' என்பதிலும் என்ன பொருள் இருக்குமோ? என்பது நமக்குத் தெரியவில்லை...

கல்வி மந்திரியாரின் இந்தக்கட்டாயக் கல்வித் திட்டம் ஒரு அறிவிப்பு மட்டுமல்ல, தற்போதைய தமிழ்நாட்டிற்குத் தமிழ்மக்களுக்கு விடுகின்ற ஒரு சவால் ஆகும்...

தமிழன் எல்லாவற்றையும்இழந்துவிட்டான்! அவனுக்கு தமிழ்ஒன்றே மீதி! மொழியை இழந்து தமிழன் உயிர்வாழான். ஆகவே கல்விமந்திரி திரு. மாதவமேனன் அவர்களுக்கு நாம் கூறுவதெல்லாம் தமிழ்நாட்டில் தாலமுத்து நடராசன்கள் பலர் இன்னும் இருக்கின்றனர்என்பதேயாகும்.

தமிழ் வாழ்க! இந்திஒழிக! என்ற தமிழ் மக்களின் இதய ஒலி மீண்டும் கிளம்பும்! அவ்வொலி டில்லி தலைநகரை மட்டுமல்ல; கடலையும் வானையும் கூட மோதும் என எச்சரிக்கிறோம்."

சென்னையிலிருந்து வெளிவரும் "பிரசண்ட விகடன்" சென்னை மாகாணக் கல்வி ஆலோசனைக் குழுவின் யோசனைகளை சென்னை அரசாங்கம் ஏற்று நடக்கப் போகிறது என்பது அறிந்து, எழுதியிருப்பதாவது:--

"கல்வி ஆலோசனைக் குழுவின் யோசனைகளிலே ஒன்று 'இந்தி' பற்றியதாகும். அதாவது, ஏற்கனவே இரண்டு மூன்றாவது படிவங்களில் நுழைக்கப்பட்டிருந்த 'இந்தி'யை முதல் படிவம் முதல ஆறாம் படிவம் வரை கட்டாய பாடமாக்க வேண்டும் என்று சொல்லியிருப்பது...'இந்தி'யைக் கட்டாயமாக்கிய முன்னாள் அமைச்சர் ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்களே மந்திரிப்பதவியை விட்டு விலகிய பிறகு, மாணவர்களுடைய இளம் மூளையைப் பல மொழிகளைப் புகுத்தி கெடுக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார். அவர் பதவியிலிருந்து விலகிய 'ஓராண்டுக்குள் இந்தி' முதல் படிவம் தொடங்கி ஆறாம் படிவம் வரை வைக்கப்பட வேண்டும் எனக் கல்வி ஆலோசனைக் குழு கூறியிருக்கிறது. இக்குழுவினர் யார் என்பதும், இவர்கள் கல்வித் திட்டங்களில் புது மாறுதல்களைக் கொண்டுவரக்கூடிய அளவு பேரறிஞர்களா என்பதும் நமக்குத் தெரியவில்லை. இவர்கள் செய்திருக் நம் மேற்கண்ட சிபார்சுகளிலிருந்து, இவர்களுக்குக் கல்வியைப்பற்றியும், சிறு பிள்ளைகளின் மூளை ஈடுபாடுகளைக் குறித்தும் ஒன்றும் தெரியாது என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. உலகில் வேறெங்கும் 9 வயதில் தாய்மொழி தவிர, முற்றும் வேறுபட்ட இரண்டு தனிமொழிகளைப் படிக்கும் வழக்கம் கிடையாது."

X X X

வானொலியிலே பாட வகுப்பு, தனிப்பட்ட முறையில் இந்துஸ்தானி போதனை பள்ளிகள், தினமணி கதிரிலே பாடம், தினசரியிலே 'இந்தி கற்க' ஒரு பகுதி-இந்தியைப் பரப்ப இத்தனை வசதிகள்!

இப்படி இந்தியைப் பரப்புவது காண நாம் எரிச்சல் கொள்ளவில்லை!

இந்தி — நமது விரோதியல்ல! உருட்டுக் கண்ணும், முறுக்கிய மீசையும் ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்டு நம்மை விழுங்க வரும் ஒரு பெரிய உருவம் என நினைத்து நாம் கூக்குரலெழுப்புவதற்கு!

அதுவும், ஒரு மொழிதான்—அது தேவையா, வேண்டாமா என்பது நமது கேள்வி! அதிலும் இளங் குழந்தைகளின் இதயத்திலே அதைக் கட்டாயப் படுத்திப் புகுத்த வேண்டியது அவசியமா? — இது நமது ஆத்திரங்கலந்த கேள்வி.

கேள்விகளுக்குப் பதில்தராத, காங்கிரஸ் சர்க்கார், வக்கும் வழியுமற்ற ஆளவந்தார், 'வக்கிரபாதை'யில் நடக்க காலடி எடுத்து வைப்பானேன்?

இந்தி 'இந்நாட்டில் புகுத்தப் பட்டால், அது படிப்படியாக நம் வாழ்வைச் சிதைத்துச் சித்திரவதை செய்துவிடும் — பல விளக்கங்கள் இதுவரை தரப்பட்டு விட்டன, நம்மால்!

> "ஒரு கலாச்சாரத்தின் மீது இன்னொரு கலாச்சாரத்தைத் திணிக்க முயற்சித்தால் தகராறு ஏற்படவே செய்யும்"

அண்மையில் ஏப்-9-ந்தேதியன்று புது டெல்லி கலாச்சார உறவு கவுன்சிலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் பண்டிதநேரு இவ்வண்ணம் வெளியிட்டுள்ளார்.

> இந்தியே அரசாங்கமொழி;
> பொது மொழி இந்திதான்.

என்று முடிவு செய்து விட்டனர், ஆதிக்கபுரியிலிருக்கும் வடநாட்டு மேலிடத்தார்.

ஆதிக்கபுரியை அண்ணாந்து, கையேந்தி, பதவிப் பிச்சை பெற்று அதிகாரப் பசியைத் தீர்த்துக்கொள்ளும், நிலையிலிருக்கும் இங்குள்ள 'போக்கற்ற புண்யாத்மாக்களும்' தலையாட்டுகின்றன — தறுதலைபாட்டம் ஆடத் துவங்குகின்றன!

மந்திரிப்பதவி எப்போதும் நீடிக்கும் என்ற எண்ணம் மாதவமேனன்கள் மனதிலே தாண்டவமாடுகிறது போலும்—இன்று பவனிவரலாம்—படாடோபத்துடன்! ஆனால் இந்த கோலாகல வைபவம் எப்போதும் நீடிக்காது—மறுபடியும்'வழியோரம் செல்லும் வரதக்' ஆகவேண்டிய நிலை பிறக்காமற் போகாது!

(16-ம் பக்கம் பார்க்க)

# மனப் போர்

தொடர்கதை — தில்லை வில்லாளன்

பாக்கியம் ஓய்வு கிடைத்தவுடன், லில்லிக்கு, தான் வருவதாகக்கடிதம் எழுதினாள். அன்று இரவு வண்டியிலே தங்கம்மாவுடன் மதுரைக்குப் போவதென்று தீர்மானித்தாள். ஆகவே, முன்னதாகவே இரவு உணவை முடித்துக்கொண்டு, இருவரும் ஒரு வண்டியில் புகைவண்டி நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு கார் வந்தது, எதிர்ப்புறத்திலிருந்து...இந்த வண்டியைக் கண்டு நின்றது. 'டாக்டர்' கருணாகரன் இறங்கி வந்தார். அவரைக் கண்டதும் பாக்கியம் துள்ளிக் குதித்து வண்டியிலிருந்து இறங்கினாள்.

"மிஸ் பாக்கியம்...எனக்கு ஒரு உதவி. மதுரையில் என் நண்பர் நாரணன் என்று ஒரு மனோ வியாதி மருத்துவர் இருக்கிறார் அவரிடம் நான் ஒரு வேண்டுகோள் விட்டிருக்கிறேன். எனது அன்பிற்குரிய குடும்பத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் 'ஒரு மாதிரி'யிருக்கிறான். அவன் பெயர் வேலன். அவனை அங்கு அனுப்பவேண்டும். அது பற்றி மறக்காமல் எழுதச்சொல்லு"

"அப்படியே செய்கிறேன்."

பிறகு, கார் போய்விட்டது. வண்டியில் பாக்கியம் ஏறிக்கொண்டாள். நிலையம் அடைவதற்கும் அவர்கள் போகவேண்டிய வண்டி வருவதற்கும் சரியாக இருந்தது. இரண்டு இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் பெற்றுச் சென்றனர். வண்டியில் ஏறி உட்கார்ந்தனர். பிச்சைக்காரரிடையில் ஒருவன் தலை வாழையிலையில் விருந்துண்பது போலத்தான் மேல்வகுப்பு வண்டிகள் இருந்தன! அடித்து உதைத்துக்கொண்டு மூன்றாம் வகுப்பு பிரயாணிகள் ஏறி உட்காரவும் நிற்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதையும், முதல் இரண்டாம் வகுப்புகளில் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருக்கும் கனவான்களின் தவிப்பின்மையையும் பார்த்தவர்கள் என்ன நினைப்பார்கள்? எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை...எல்லோரும் இந்நாட்டு மன்னர்...என்று பாரதியார் பாடலை நாம் பாடலாமல்லவா?...

மறுநாள் காலையில் லில்லியின் வீட்டுக்கு எதிரில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு பெண்கள் இறங்கினர். லில்லி ஓடோடி வந்தாள்.

"வாடி பாக்கியம்..." என்று வரவேற்புரை வாசித்தாள்.

"இதோ வந்துவிட்டேனடி!" என்று கிண்டல் கலந்த நன்றியுரை கூறினாள்.

"என்னடி ஏமாற்றிவிட்டாய்... இன்னும் ஒருவர்......இல்லையே!" என்றாள்.

பாக்கியம் நாணத்தோடு தலையைக் குனிந்துகொண்டாள்.

## தோல்வியா?

மறுநாள் பகல், வெகு நேரங்கழித்தே சேரன் அறைக்கு வந்து சேர்ந்தான். நீலன் வெகு ஆவலோடு வரவேற்றான்; முருகனும் இருந்தான் அங்கு!

"என்னப்பா, படையெடுப்பின் முடிவு என்ன?..........தோல்வியா, வெற்றியா?"

"..............."

"ஊமையனாகிவிட்டாயா! அப்பொழுது பாக்கியதேவியின் அருள் கிடைக்கவில்லையா?

"அருள் கிடைத்தது......கேட்ட அளவிலல்ல, முக்காலபாகவரம்!"

"சேரா......புரியவில்லையே!"

சேரன் பாக்கியத்தின் நடவடிக்கைகளை எடுத்துச்சொன்னான். நீலன் சிரித்தான். பாவ காரியம் என்று எதைச் சொன்னானோ, அதையே செய்ய முயன்றிருக்கிறான். முயற்சியிலே தோல்வி கண்டு முகஞ்சுளித்து நிற்கிறான்!

"மறுப்பிற்குக் காரணம்......?"

"பாவம்......"

"அது பட்டுந்தானா......?"

"காக்கப்படவேண்டியது கற்பாம், நெறியாம், ஒழுக்கமாம்......இன்னும் ஏதேதோ சொன்னாள்!"

நீலன் தனது இயற்கையான போக்கிலே சேரனிடம் பேசினான். பாக்கியம் உண்மையிலேயே பெண்களால் வழி படவேண்டிய தெய்வம்...... உணர்ச்சிக்கு அடிமையாகி, பிறகு அவதிப்படும் பெண்மணிகளுக்குத் தக்கதோர் வழிகாட்டிவிட்டாள். தனியறையில், தன்னால் உண்மையில் விரும்பப்படும ஒரு வாலிபனிடம் மூன்றுமணி நேரத்திற்குமேல் வாதாடியும், போராடியும் தப்பித்துக் கொண்டாள். தனிமை இனிமையைக் கிளப்பிவிட்டது. காதலன் வற்புறுத்தலை ஏவியபடி இருந்தான். சமயமோ சதி செய்யத்திட்டமிட்டுவிட்டது!......என்றாலும் தப்பித்துக் கொண்டாள். எப்படி? அதுதான் மன அடக்கம்......மன உணர்ச்சி, அவள் போட்டுவிட்டாள் ஆயுள் தண்டனை......ஆகவே அவள் வென்றாள். அவள் வெற்றியை நாம் பாராட்டுவோமாக!

அவளுக்குத் தெய்வபக்தி உண்டோ, இல்லையோ......அதுஒருபுறம் இருக்கட்டும். பாவம் என்று தடுத்திருந்தால், அதில் நான்கவலைப் படவேண்டியதில்லை. செய்யக்கூடாதது என்று சொல்வதற்கு சமூகம் சொல்லிக்கொடுத்த பரம்பரைச் சொல் அது, என்ற அளவோடுநிறுத்திக்கொள்ளலாம்! அந்த நேரத்தில் எதையாவது சொல்லி அவள் அவனைத் தடுத்திருக்கவேண்டும். அவன்

காதல்வாளை வீச அவள் பாவகேடயத்தைப் பயன்படுத்தத்தான்வேண்டும்.

பாக்கியம் எதையோகூறித்தன்னை மனிதப் பிறவி என்று நிரூபித்து" விட்டாள். அவள் வாழ்க......இப்படி நீலன் பேசவே, முகுந்தன் குறுக்கிட்டான்.

பாவம், கற்பு......என்று வசதி இருந்ததால் பாக்கியம் தடுத்து விட்டாள். ஆனால் தகாது என்று தெரிந்தும் இந்த காரியத்தைச் செய்யவேண்டிய அவசியத்திலே தள்ளப்படுகிறார்கள். நெருப்பு என்று தெரிந்தும் அதில் ஓடுகிறார்கள். மடுவு என்றுணர்ந்தும், அதிலே குதிக்கிறார்கள். மலக்குழியென்றும், சாக்கடை வாய்க்கால் என்று புரிந்தும் அதில் நடக்கிறார்கள்......ஏன்? அந்த நிலைமையை யார் மாற்றுவது? எப்படித் திருத்துவது? இதுவரை திருத்தாததற்குக் காரணம் அலட்சியமா? அவசியமில்லை என்று கருதியதாலா? முடியாமைதான் காரணமோ! முகுந்தன் தன்வாழ்விலேயே நடந்த ஒருநாள் நிகழ்ச்சியை மிக உருக்கத்துடன் சொன்னான். இருவரும் உன்னிப்பாகக் கேட்டனர்.

## இன்பக் கொள்ளை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்......ஒருநாள் பகல்.....திருச்சியில் 'டிக்கட்' பரிசோதகனாக இருந்தான் முகுந்தன். மதுரையிலிருந்து வந்த வண்டியிலிருந்து இரண்டுபேர் வந்தார்கள். அவர்களிடம் 'டிக்கட்' இல்லாமையால், வண்டியில் வந்த சோதனையாளன் அவர்களை முகுந்தனிடம் ஒப்பிவித்துவிட்டுச் சென்றுவிட்டான். கூட்டங்குறைந்த பிறகு அவர்களைப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஒருவயதான பெண்மணியும் ஒரு அழகுசுந்தரியும், நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போலவே தெரிந்தது.

"டிக்கட் இல்லையா?"

முகுந்தன் கடுமையாகவே கேட்டான்.

"இல்லீங்க.........கொண்டுவந்த துட்டெல்லாம் இவளாத்தாளைதேடுறதிலேயே செலவாயிடுச்சு!"

அந்த பெரிய அம்மா சொன்னாள்.

முகுந்தன் அந்தப் பெண்ணைப் பார்த்தான் அவள் நாணமும், அச்சமும்கொண்டு பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்.

"ஏம்மா, உன்பெயர் என்ன?"

'டிக்கட்' கேட்கவேண்டியவன் பெயரைக்கேட்டான்.

"சகுந்தலை......"

என்றாள் அந்தப் பெண் மெல்லிய குரலில்.

அவளுடைய அழகு முகுந்தன் முகத்திலே கடுகடுப்பை விரட்டிவிட்டது. அவன் கனிவாகவே பேசினான். அழகு ஒரு விசித்திரமான மயக்கப்பொடி. அது பட்ட இடம் துளிர்க்கும்......முகுந்தனின் கண்கள் அதனால்தான் போலும் விசாலமாக விரிந்தன! அவளைப் பற்றிப் பரிவோடு விசாரிக்கத் தொடங்கினான். பெரியவள் இடையிடையே பேசினாலும் சகுந்தலையின் பேச்சைக் கேட்பதிலேதான் அவனுக்கு இன்பம் இருந்தது. பருவமும் பருவமும் விரும்பின......எதிரிடைத் துருவங்கள் இழுத்துக்கொள்வதைப்போல!

சகுந்தலையின் உடனிருப்பவள் அவளுடைய சொந்தத் தாயல்லவாம்... வளர்த்தவளாம்! அவளைப் பெற்றவள் அவளுக்கு பத்து வயதாக இருக்கும் பொழுதே ஓடிவிட்டாளாம். அதிலிருந்து அந்த அம்மாள் தான் வளர்த்து வந்தாளாம். அவளுடைய தாயை யாரோ திருச்சியிலே பார்த்ததாக அவளுடைய வளர்ப்புத்தாய் வடிவாம்பாளிடம் சொன்னார்களாம். சகுந்தலை தன் தாயைப் பார்க்க வேண்டும் என்று துடித்தாளாம். ஆகவே மதுரையிலிருந்து புறப்பட்டு வந்தார்கள் வழியிலேயே கொண்டுவந்த சிறுதொகை கரைந்துவிட்டது. பிறகு துணிந்து புகைவண்டியில் ஏறினார்கள். மாட்டியும் கொண்டார்கள். இப்பொழுது முகுந்தனின் கருணையை எதிர் பார்த்து நிற்கிறார்கள்!

"உங்கள் ஊர்......?"

"மதுரை......"

சகுந்தலை இப்பொழுது சாதாரணமாகவே பேசத் தொடங்கிவிட்டாள்.

"அடடா, என் சொந்த ஊர் அது தான். நம் ஊர்க்காரர்களாகி விட்டீர்கள்!"

முகுந்தன் புளுகினான்.

"தம்பி......எங்களை நீதான் காப்பாத்தனும்......"

வடிவாம்பாள் வேண்டுகோள் இது.

"பயப்படாதே அம்மா...சகுந்தலையைப் பார்த்ததிலிருந்து என் மனது படாத பாடு படுகிறது! நீங்கள் போய்த் தேடிப்பார்த்துவிட்டு என் அறைக்கு வந்துவிடுங்கள்..."

முகுந்தன் இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினான். பிறகு தனது அறையின் முகவரியைத் தெளிவாகக் கூறினான். அவர்கள் நன்றியறிதலோடு பார்த்தார்கள். வடிவாம்பாள் அழுதாள். சகுந்தலை அவனை ஆர்வத்தோடு நோக்கினாள். அவர்கள் வெளியேறிச் சென்ற திசையை நோக்கி வெகுநேரம் பார்த்துக் கொண்டே நின்றான்.

அன்று மாலை முகுந்தன் தன் அறையிலிருந்த மாடியின் வெளித் தாழ்வாரத்தில் இங்கும் அங்கும் உலவிக்கொண்டிருந்தான். ஆம் அவன் அவர்களை எதிர்பார்த்தான். ஏன்? அவன் மனம் சொல்லக் கூசுகிறது. அவன் எண்ணம் நடுங்குகிறது! அவன் மனச்சாட்சி அவன் இதயத்துடன் 'பாக்ஸிங்' போடுகிறது! அவன் என்ன செய்வான்? சகுந்தலை ஏன் அப்படி அனாதை போல வரவேண்டும்? எங்கிருந்தோ வந்து எங்கேயோ போய்விட்டாள். ஆனால் அவன் மனதில் தொடங்கிய மனப்போர் மட்டும் இன்னும் முடியவில்லையே! அவள் ஏன் அழகியாக இருந்தாள், இருந்தது கூடக் குற்றமில்லை. ஏழையாகப் பிறந்து, முகுந்தனின் ஆதரவு நாடவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? ஒவ்வொருநாளும் எத்தனை ஆயிரம் அழகிகள் போகிறார்கள்......அவர்களைப் பற்றியெல்லாம் அவன் நினைக்கிறானா? நினைவுதான் வருகிறதா? ஆனால் சகுந்தலையிடம் மனம் அப்படி ஏன் ஓட்டவேண்டும்?...அவள் வருவாளா? வராமல் ஏமாற்றிவிடுவாளா? வந்தால் என்ன செய்வது? எப்படிப் பேசுவது?

முகுந்தன் சிந்தனை

யாகவே இருந்தது. அப்பொழுது அவன் எதிர்பார்த்தபடியே அவர்கள் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள். முகுந்தன் மாடிப்படிகளிலிறங்கிப்போய் அவர்களை வரவேற்கத் தயாராக நின்று கொண்டிருந்தான். அவர்கள் வந்ததும் மேலே அழைத்து வந்தான். நிலாபட்ட அந்த மாடித்தாழ்வாரத்தில் உட்கார்ந்தார்கள்.

"சகுந்தலை, கிடைத்தாளா உன் அன்னை......"

உரிமையோடு பெயரிட்டுக் கேட்டான்.

"இல்லிங்க..."

அவள் சொன்னாள்.

"தம்பி...எங்களை எப்படியாவது ஊருக்கு அனுப்பிவிட்டால் கோடி புண்ணியம்"

என்றாள் அவளின் வளர்ப்புத் தாய்.

"நாளை காலை வண்டியில் ஏற்றி விடுகிறேன்"

என்றான் முகுந்தன்

அவர்களை அழைத்துக்கொண்டு போய் பக்கத்து உணவுக் கடையில் நல்ல விருந்து நடத்தினான். பிறகு தன் அறையிலே அவர்களைப் படுக்கவும் சொன்னான். அவன் மட்டும் தனியாக வெளித் தாழ்வாரத்தில படுத்துக் கொண்டான், ஆனால்...... அவனது மனம்? போர், போர், ஒரே போராட்டம்!

வெளியிலே நல்ல நிலவு...ஆனால் அவனைச் சுற்றிலும் ஒரே இருட்டு .........வெளிப்புறத்தில் மட்டுமா, அவன் உள்ளத்திலும்தான்! சுவற்றுக் கோழி ஙொய் ஙொய்...என்று அழுதபடியே இருந்தது, ஆந்தை அலறிக்கொண்டிருந்தது, இருந்தாலும் அவன் மனம் தூங்கவில்லை, பயப்படவில்லை.

பக்கத்து அறையில் ஒரு அழகி தூங்குகிறாள்......அனாதரவாய்! நீ நினைத்தால் உன் கனியாவாள் ஏன் அஞ்சுகிறாய், போ...போ...போ... என்று விரட்டியது அவன் ஆசை. பயப்படுகிறாயா......நாணுகிறாயா.... அடமதிகெட்டவனே .என்று பருவம் தூண்டிவிட்டது, விழி, எழு...தூங்காதே! முன்னேறு.........தூங்கும் பொன் வண்டோடு இன்பத்திருவிழா கொண்டாடு. ஓடு......இது போல காமம் தட்டி விரட்டியது!

அவன் மனத்திலே புயல்...வீசத் தொடங்கி விட்டது!

அவள் பேதை. முறையோடு யாருக்காவது உரிமைப்படுத்த வேண்டிய செல்வம். பாழாக்கி விடாதே!...அடக்கம் சொல்லிற்று.

உதவி செய்தபோது......இரக்கம் உள்ளவன் போலக் காட்டிக் கொண்டாயே......... இப்பொழுது உபத்திரவம் செய்யப் போகிறாயா? அட துரோகி....அப்படி பொறுமை படபடக்கப் பேசிற்று. அவள் ஏழையடா, அவளது வாழ்வைப் பாழாக்காதே. இன்று விபசாரத் துவக்கு விழா நீ செய்துவிட்டால் நாளை அவள் நல்வாழ்வு நாசமாகிவிடும். அந்தப் பெருமை உனக்கு வேண்டாம் நீதி—பேசிற்று.

பெண்கள் முன்னேற்றம் என்று அடிக்கடிப் பேசுவாயே...இதுதான் அந்த தொண்டா?...நல்லவேடிக்கை ...எனக்கு மட்டும் அதிகாரமிருந்தால் உன்னைத் தூக்கிலே போட்டுக் கொன்றுவிடுவேன்— கொள்கை கோபத்தோடு கூவிற்று!

அவன் மனத்திலேவெள்ளம்...... பெருகத்தொடங்கிவிட்டது!

நிலைமை அவனை எழுப்பிவிட்டது நேர்மை படுக்கச்சொன்னது. என்ன செய்வான்? ஆம், நீதி தோற்றுவிட்டது......தோற்றே போயிற்று! அவன் எழுந்தான். மெதுவாக நடந்தான். பூனைபோலச் சென்றான், ஆந்தையின் அலறல் அவனைத் திடுக்கிட வைத்தது. எங்கேயோ ஒரு நாய் மட்டும் அந்த அமைதியான இரவை அழுது அழுது விரட்டிக் கொண்டிருந்தது.

மெதுவாகக் கதவைத் திறந்தான் அந்தப் பெரியவள் விடும் குறட்டை சத்தம் மட்டும் கேட்டது. அவன் நெருங்கினான். அவன் கால்கள் நடக்க மறுத்தன. அவன் இரத்தம் எண்ணெய்க் கொப்பரையாகக் கொதித்தது. அவளை மெதுவாக எழுப்பினான், அவள் திடுக்கிட்டு,எழுந்தாள். அவளை சத்தமின்றி வெளியில் அழைத்து வந்தான்.

"என்னங்க........."

அவள் பேசினாள். தொண்டை அடைத்துக்கொண்டது.

"வந்து......"

முகுந்தன் பேசினான், எதைப் பேசுவது.......?

பிறகு........அவள் புரிந்து கொண்டாள்.

'ஐயோ......இது பாவம். பெண் பழி பொல்லாது. என்னைக் கெடுக்காதீர்கள்......நீங்கள் செய்த உதவியெல்லாம் இதற்குத்தானா?''

அவள் விசித்து அழுதபடியே சொன்னாள்

தடுக்கக்கூடிய அளவு தடுத்தாள். முடியவில்லை. முகுந்தன் தன் எண்ணத்தை முடித்துக் கொண்டான். அவன் அவளை பிறகு அவள் படுக்கைக்கு அனுப்பிவிட்டான். தனது கயிற்றுக் கட்டிலில் வந்துபடுத்தான் அப்பொழுதும் ஆந்தை அலறிக் கொண்டிருந்தது. எங்கோ ஒரு மூலையில் கழுதை வேறு 'சங்கீதக்கச்சேரி' நடத்திக்கொண்டிருந்தது! அவன் மனம் போராடிக்கொண்டுதானிருந்தது.

(தொடரும்)

---

13-ம் பக்கத் தொடர்ச்சி

"மந்திரிப் பதவி சாசுவதமல்ல, ஆனால் மக்கள் உலகம் என்றும் இருக்கும்" — ஓயாத அலைச்சலின் காரணமாக இந்த உண்மையை மறந்திருக்கலாம் மலையாள நண்பர் மாதவ மேனன். அவருக்கு இதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

வெந்த புண்போல இருக்கிறது இன்று நாட்டின் நிலை, வெறுப்பையும் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டு வருகிறது உங்கள் ஆட்சி.

இந்த நேரத்தில புண்தாங்காது படுத்துக்கிடக்கும் பசுவின் உடலில் வேலைப் பாய்ச்சாதீர்கள் — வில் பிடித்து வாள் எடுத்து வீரக்குரலெழுப்பி, வெற்றி முரசுகொட்டி வாழ்ந்த தமிழன் உடலில் ஓடுவது தண்ணீரல்ல—செங்குருதி!

✻